பக்கங்கள்: 12+IV= பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 15 திங்கட்கிழமை (01-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:277

## சமாதானத்தைக் குலைக்கும் நடவடிக்கை:

# அரசாங்க உத்தியோகத்தர்கள் மீது வவுனியாவில் இராணுவம் கெடுபிடி

## வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் பிரதமர் ரணிலுக்கு முறைப்பாடு!

வவுனியா,செப்ரெம்பர் 1

வவுனியா இராணுவம் மக்களைப் பயமுறுத்தி அவர்களின் இயல்பு வாழ்க்கையில் தலையிடுகிறது; அவர்களைத் தொந்தரவுபடுத்துகிறது; சமாதானத்தைச் சீர்குலைக்கப் பார்க்கிறது; சமாதான ஒப்பந்தத்தை மீறி மனித அடிப்படை உரிமை மீறல சம்பவங்களில் ஈடுபட்டுவருகிறது.

அரச உத்தியோகத்தர்கள் மீதும் இராணுவக்கெடுபிடி அதிகரித்து வருகிறது. விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை சமாதானத்துக்கான 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளின் ஆயத்தக் கூட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதில் குற்றம் கண்டு இராணுவம் நடவடிக்கை எடுக்கிறது. இப்படி வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் பிரதமருக்குக் கடிதம் மூலம் முறைப்பாடு செய்திருக்கிறது.

கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

வவுனியாவில் நடைபெற இருக்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வினை பொதுமக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆரம்பக் கூட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் உட்பட அதிக பொதுமக்களும் கலந்து கொண்டனர். கடமை நாள் அல்லாத ஒரு விடுமுறை நாளில் (ஞாயிற்றுக் கிழமையே) கூட்டம் நடந்தது. அப்படியிருந்தும் இக்கூட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு கலந்துகொள்ளமுடியும் என்று அவர்களிடம் விளக்கம் கேட்குமாறு திணைக்களத் தலைவர்களுக்கு வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## திரைப்படக் காட்சி நிறுத்தப்பட்டதால் நகரில் இளைஞர்கள் அட்டகாசம்!

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ். நகரப் பகுதியில் உள்ள திரையரங்கில் நேற்றிரவு 9.30 மணி படக்காட்சி திடீரென நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு திரண்டிருந்த இளைஞர் கோஷ்டியினர் பெரும் அட்டகாசங்களில் ஈடுபட்டனர்.

மாலை 6.30 மணிக் காட்சி முடிந்து ரசிகர்கள் வெளியேறிக்கொண்டிருந்த சமயம் 9.30 மணிக் காட்சிக்கு பெரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மடு வீதி போக்குவரத்துக்கு நேற்று முதல் மீண்டும் திறப்பு

மன்னார்,செப்.1.

கடந்த பல தினங்களாகப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த மடு வீதி நேற்று முதல் மீண்டும் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டிருக்கிறது. இவ்வீதியில் ஏற்படுத்தப்பட்டிருந்த சகல தடைகளும் இதற்காக அகற்றப்பட்டிருக்கின்றன. வீதி திறக்கப்பட்டுள்ளது என்பதை கொழும்பில் இராணுவ அதிகாரிகளும் தெரிவித்தனர்.

மடு வீதி நேற்று முதல் வழமை போன்று போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டிருப்பதைத் தெரிவித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பேச்சாளர் அக்னஸ், வீதி திறந்து விடப்பட்ட போதிலும் போக்குவரத்துக்கள் இன்னமும் சிவரை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் கூறினார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று அல்லது நாளையே மடு வீதி முற்றாகத் திறப்பு

கொழும்பு,செப்.1

மடு வீதி நேற்று பொதுமக்களுக்காக மீண்டும் திறந்துவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் இன்று அல்லது நாளையே அப்பிரதேச மக்களுக்காக முற்றாகத் திறந்து விடப்படுமென மன்னார் இராணுவப் பிரிகேடியர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து இதற்கான உத்தரவு இன்று அல்லது நாளை கிடைக்குமெனவும் அவர் கூறினார். மடு வீதி இன்னும் ஓரிரு தினங்களில் அப்பிரதேச மக்களுக்காக திறந்து விடப்படுமென்று மடு ஆலய பரிபாலன நிர்வாகிகளும் நேற்றுத் தெரிவித்தனர்.

## 'பொங்குதமிழ்' ஒரு ஜனநாயக நிகழ்வு; அரச ஊழியர்கள் அதில் பங்குபற்றலாம்!

### அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு,செப்.1

'பொங்குதமிழ்' நிகழ்வு ஒரு ஜனநாயக நிகழ்வு அதில் அரச ஊழியர் கலந்துகொள்வது நல்லது என்று தெரிவித்துள்ளார் பொதுநிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபயவர்த்தன.

பி.பி.ஸி. உலக சேவையின் சிங்கள பிரிவான சந்தேஸியவிற்கு அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அச்செவ்வியில் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் நடைபெறவிருக்கும் 'பொங்குதமிழ்' நிகழ்வு ஒரு ஜனநாயக முறையிலான நடவடிக்கை. கலாசார நடவடிக்கை அரசாங்க ஊழியர்கள் இதில் கலந்துகொள்வது நல்லது.

வடக்கு - கிழக்கு போன்று நாட்டின் போர் நடந்த பகுதிகளில் இத்தகைய ஜனநாயக நடவடிக்கைகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

இத்தகைய நிகழ்வுகளில் அரச ஊழியர்கள் கலந்துகொள்வதை யாரும் பலவந்தமாகத் தடுக்கக் கூடாது; இயலுமானால் அரசின் ஆதரவையும் அதற்கு வழங்கவேண்டும்.

'பொங்குதமிழ்' நிகழ்வு விடுதலைப் புலிகளினால் ஒழுங்கு படுத்தப்படும் நிகழ்வாக இருந்தாலும் அவர்கள் ஜனநாயக வழிமுறைக்கு வந்தது எமக்குப் பெரிய வெற்றி.

ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் செழிக்கவைப்பது அரசாங்கத்தின் கடமை என நான் நினைக்கின்றேன் -, என்றார்.

(ம-12)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் திருமலையில் இன்று மறியல்

திருகோணமலை,செப்.1

வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணி புரிவோர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி இன்று திருமலை மாகாணக்கல்வியமைச்சு முன் மறியல் போராட்டத்திலீடுபட தீர்மானித்துள்ளனர்.

இதற்கென, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற பிரதேசங்களிலிருந்து நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் நேற்று திருமலையில் வந்து கூடியுள்ளனர்.

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலிருந்து விசேட பஸ்கள் மூலம் ஆசிரியர்கள் இன்று திருமலை சென்றடைவர்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நாளொன்றுக்கு 80 ரூபா கொடுப்பனவுடன் சுமார் 750 பேர் வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் பணிபுரிகிறார்கள்.

## அரியாலைப் பகுதி இளைஞர் லண்டனில் குத்திக் கொலை!

வெம்ளி,செப்.1

லண்டன் வெம்ளி பகுதியில் யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த அசன் இரத்தினசேகரம் (வயது 18) என்பவரே கொலைசெய்யப்பட்டவர் ஆவார்.

காரில் இன்னும் இரு இலங்கையர்களுடன் சென்று கொண்டிருந்த போது, வெம்ளிப் பகுதியில் ஏளிங் வீதியும் காலைன் வீதியும் சந்திக்கும் சந்தியில், இன்னொரு காரில் வந்து மறித்த இருவர், அசனை காருக்கு வெளியே இழுத்துக் கத்தியால் குத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கோஷ்டியாகக் காரில் ஏற்றவர்களே

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு தமிழ்த் தேசியக் குழு கண்டனம்

கொழும்பு,செப்.1

தமிழ் பேசும் மக்கள் தாங்கள் வரலாற்றுக் காலந்தொட்டு பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தாயகமான வடக்கு-கிழக்கைப் பாதுகாப்பதில் இந்தியாவிற்கு தார்மீகக் கடமை இருக்கிறது. இதனை அரசியல் கத்துக்குட்டிகளான சிஹல உறுமய கட்சியினர் புரிந்துகொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியப்பணிக் குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி வடக்கு - கிழக்கை இரண்டாகப் பிரிப்பதற்கான யோசனை ஒன்றினைத் தெரிவித்திருக்கின்றார். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கு எதிராக ஜனாதிபதியின் காய் நகர்த்தலின் ஒரு கட்டமே இதுவாகும். இந்தச் சூழ்நிலையில் சிஹல உறுமய இதனை ஆதரித்துக்கொண்டு இந்தியா அமைதிகாக்க இங்கே வரவேண்டும் என்று கூறுகின்றது. இதன்மூலம் சிஹல உறுமய இலங்கை அரசியலில், தான் ஒரு கத்துக்குட்டி என்பதனை உறுதிப்படுத்தியுள்ளது என தமிழ்த் தேசிய பணிக் குழு தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB தேசிய சேமிப்பு வங்கி

- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- வருடாந்தம் 16% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB

தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# போலி 'லைசென்ஸ்' சமர்ப்பித்தமையே கணனிப் பத்திரம் தாமதிக்க காரணம்

## மோட்டார் உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.1

நடைமுறைக்குப் புறம்பாக பணம் செலுத்தி பெறப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டமையே, கணனிமயப்படுத்தப்பட்ட 'லைசென்ஸ்' வழங்குவதில் தாமதம் ஏற்படக் காரணம்.

- இப்படித் தெரிவித்தார் யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.பத்மநாதன்.

நேற்றுக் காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினருடனான கலந்துரையாடலிலேயே உதவி ஆணையாளர் இதனைத் தெரிவித்தா.

சிற்றூர்திச் சங்கங்களின் இணையத் தலைவர் எஸ். கெங்காதரன் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த அமுதன், பாலையா ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

சிற்றூர்திச் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் சாரதிகள், நடத்துநர்கள மற்றும் உரிமையாளர்கள் என சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இக் கலந்துரையாடலில் பங்குகொண்டிருந்தனர்.

யாழ். மோட்டார் வாகன போக்குவரத்து உதவி ஆணையாளர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

18 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபருக்கும் வாகனஞ்செலுத்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. 21வயதைப் பூர்த்திசெய்துள்ள, இரண்டு வருடத்துக்குக் குறையாத சாரத்திய அனுபவம் உடையவர்களுக்கே கனரக வாகனம செலுத்தும் அனுமதிப்பத்திரம வழங்கப்படும். சாரதி அனுமதிப்பதத்ரத்தைத் தொலைத்தவர்களுக்கு அதனை வழங்குவது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை தலைமைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு மேற்கொண்டுள்ளோம்.

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதில் சில இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்த எவருக்கும் அனுமதியில்லை. அவர்கள் மீது போக்குவரத்துப் பொலீஸார் நடவடிக்கை எடுப்பர்.

புகைபிடித்தவாறோ, மது அருந்திய நிலையிலோ, அதிவேகமாகவோ மற்றும் விபத்துக்கு ஏதுவான முறையில் சாரத்தியம் செய்வோரின் அனுமதிப் பத்திரம் உடனடியாகவே ரத்துச் செய்யப்படும்.

சிற்றூர்திகளுக்கான வழி அனுமதிப்பத்திரத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு தலைமைத் திணைக்களம் எமக்கு அறிவுறுத்தியுளளது. அடுத்த வாரத்திலிருந்து இதுதொடர்பில் இறுக்கமான போக்கை பொலீஸார் கடைப்பிடிப்பர்.

- இப்படி உதவி ஆணையாளர் மேலும் கூறினார். (எ-9-6-ரி)



*யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் அரசியல் துறை உறுப்பினர் அமுதன், யாழ்.மாவட்ட போக்குவரத்துத்துறை பொறுப்பாளர் பாலையா ஆகியோர் கருத்துரை வழங்கினர். கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும், அமுதன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.*

**தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும்**

# திடமான செயற்பாடு பிரதமரிடம் இல்லை!

## மட்டக்களப்பு கருத்தரங்கில் அஜித் ரூபசிங்க

மட்டக்களப்பு,செப்.1

தமிழரின் பிரச்சினைக்கு உறுதியான தீர்வுகாணும் திடமான செயற்பாடு பிரதமர் ரணிலுக்கு இல்லை. ஏகாதிபத்தியத்துக்குத் தலையாட்டுபவராகவே அவர் காணப்படுகிறார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற இணையம் ஏற்பாடு செய்த கருத்தரங்கு வ.கமலதாஸ் தலைமையில் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் நடந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர் அஜித் ரூபசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும். 400 வருடங்களாக அந்நியரின் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த இலங்கை தொடர்ந்து ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கும் சக்தியாகவே இருந்து வருகிறது. இலங்கை அரசு ஏகாதிபத்தியத்துக்குத் துணைபோகும் சக்தியாகத் தொடர்ந்து இருந்துவருகிறது.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் ஒற்றுமை மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். பிற சக்திகளின் தலையீடு பிரச்சினையை பூதாகரமாக்கும் செயற்பாடாக அமையும். தமிழர் பிரச்சினையில் பிரிக்க முடியாத சக்தியாக விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள். தீர்வு முயற்சியின் போது நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

# கச்சக்கொடி சுவாமிமலை மக்கள் மீண்டும் குடியேற இராணுவம் தடை!

## அங்குசென்ற 283 குடும்பத்தினர் வெளியேற்றம்

மட்டக்களப்பு,செப்.1

தமது சொந்தக் கிராமத்தில் மீண்டும் குடியேறச் சென்ற தமிழ் மக்கள் இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட சம்பவம் ஒன்று மட்டக்களப்பு பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்கிராமமான கச்சக்கொடி சுவாமிமலை கிராமத்தில மீண்டும் குடியேற 283 குடும்பங்களைச சேர்ந்தவர்கள் சென்றுள்ளனர். அவர்கள் காணிகளைத் துப்புரவுசெய்து கொண்டிருந்தபோது, அங்கு சென்ற இராணுவத்தினர் அவர்களை வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

தமது சொந்த வீடுகளில் குடியேறவே வந்திருப்பதாக அம்மக்கள் படையதிகாரிகளிடம் விளக்கிக் கூறிய போதும், மீண்டும் குடியேற அனுமதிக்கப் போவதில்லை என்று படையினர் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

தமக்கு ஏற்பட்ட இந்நிலை தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கடந்த சனிக்கிழமை இக்கிராமவாசிகள் முறையிட்டுள்ளனர்.

கச்சக்கொடி சுவாமிமலை, பட்டிப்பளை பிரதேசத்திற்கு உரித்தான பகுதியாகும். அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இம்மக்கள் 1985 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டனர்.

# அம்பாந்தோட்டையில் 2 ஆவது சர்வதேச விமானநிலையம்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் நிறுவப்படும். புதிய துறைமுகமும் அங்கு அமைக்கப்பட்டால் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க இடமுண்டு.

- இவ்வாறு பத்தரமுல்லை இசுறுபாயாவில் நடைபெற்ற பத்திரிகையாளா மாநாட்டில் உரை நிகழ்த்திய தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் ஆனந்த குலரட்ன தெரிவித்தார்.

விமானப் போக்குவரத்து சேவைகள தலைவர் ஹேமசிறி பெர்ணாண்டோ, பொறியியலாளர்கள், விமான போக்குவரத்துச் சேவைகள், உயர் அதிகாரிகள் ஆகியோரும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் ஆனந்த குலரட்ன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

விமான நிலையம் அமைப்பதற்கு அம்பாந்தோட்டைய மாவட்டத்தில் சில இடங்களைத் தெரிவுசெய்து அவற்றைப் பார்வையிட்டு திட்டம் நிறைவேறும் சாத்தியக் கூறுகள் பற்றி எமது பொறியியலாளர்கள் மிகக் குறுகிய காலத்தில் அறிக்கை தயாரித்து கையளித்திருக்கிறார்கள்.

விமான நிலையமும் துறைமுகமும இங்கு அமைக்கப்பட்டால் சுற்றுலாப் பயணிகள் வந்துபோகும் இடமாக இந்தப் பகுதி மாறும். பயணிகள் தங்குவதற்கே 200 இற்கும் மேற்பட்ட ஹோட்டல்களை நிறுவ வேண்டியிருக்கும். கூடுதலான அந்நிய செலாவணியை நாம் பெறமுடியும்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 37ஆயிரம் குடும்பங்கள இருக்கின்றன. ஒரு குடும்பத்திற்கு ஒருவர் வீதம் வேலைவாய்ப்பு பெறும் சூழ்நிலையேற்படும் - இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

விமானப் போககுவரத்து சேவைகள தலைவர் ஹேமசிறி பெர்ணாண்டோ உரையாற்றுகையில், இவ்வருட இறுதிக்குள் விமான நிலையத்திற்கான அடிக்கல் நடப்படும். இரண்டு வருடங்களுக்குள் வேலைகள் பூர்த்தியாகும என்று தெரிவித்தார்.

# ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் சாப்பாட்டுப் பணத்தில் மோசடியாம்

## அமைச்சர் ஆறுமுகன் நாளை மாணவர்களை அழைப்பு

கொழும்பு, செப்.1

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் நிதி மோசடியொன்று இடம பெற்றிருப்பதாக அங்கு பயிலும் மாணவர்கள் கூறுகின்றனர். இம்மோசடியை அவர்கள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளனர்.

இதையடுத்த, அது தொடர்பாக ஆராய அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மாணவர்களை நாளை செவ்வாய்க்கிழமை தனது அமைச்சுக்கு அழைத்துள்ளார்.

இம்மாணவர்களின் சாப்பாட்டுக்காக அமைச்சு ஒதுக்கிய பணத்திலேயே பெரும மோசடி இடம்பெற்றிருப்பதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். கல்லூரியின் கணக்குகளைப் பரிசோதனை செய்யவந்த கணக்காய்வாளர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு விருந்தளிக்கப்பட்டதை இம்மாணவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாணவர்களுக்கு சில மாதங்களுக்கு முன்னர் பழுதடைந்த கோழி இறைச்சியை வழங்கியதால் பல மாணவர்கள் வாந்தி, வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டனர் எனவும், கோழி இறைச்சி பழுதடைந்திருப்பதைத் தெரிந்துகொண்டே கிலோ 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 150 ரூபா கணக்குக் காட்டப்பட்டதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (ம)

# அரச பஸ் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

கொத்தணி போக்குவரத்துச் சபை களுக்குச் சொந்தமான பஸ்களின கட்ட ணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்படு கின்றன.

பஸ் கட்டணங்கள் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று சபையின் தலைவரான யூ.எஸ்.எம்பாரூக் தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், 3ரூபா, 4ரூபா கட்டணங்களில் எந்த மாற்றமும் இல்லையெனவும் அவர் கூறினார். பருவச்சீட்டுக்களின் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ் குடாநாட்டிலும் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவைக் கட்டணங்களும் இன்று அதிகரிக்கப்படுகின்றன.

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.1

கொழும்பிலிருந்து வந்துள்ள சரணிய வழிகாட்டுநர்களால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பெண்பிள்ளைகள் கருத்தரங்கு ஒன்று இன்றும் நாளையும் திருக்குடும்ப கன்னியர் மடம பெண்கள் பாடசாலையில் இடம்பெறும.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் கருத்தரங்கில் பாடசாலை மாணவிகள் கலந்து கொள்வர். நாளை நடைபெறும் கருத்தரங்கில் ஆசிரியர்கள் கலந்துகொள்வர்.

**பொதுக் கல்விச் செயற்றிட்டத்தின் கீழ்**

# வடக்கு - கிழக்கில் சேதமடைந்துள்ள பாடசாலைகள் ரூ.50 கோடியில் புனரமைப்பு

ஏறாவூர்,செப்.1

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த இருபது ஆண்டுகளாக இடம் பெற்றுவந்த யுத்த அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்த பாடசாலைகள் 50 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

- இவ்வாறு மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

பொதுக்கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கி இதற்கான நிதியினை வழங்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளில் புதிதாக வகுப்பறைக் கட்டடங்கள், மலசலகூடம், வாசிகசாலைக் கட்டடம், நீர் விநியோகம் மற்றும் தளபாட வசதிகள் ஏற்படுத்தப் படவுள்ளன.

உலக வங்கியின் உதவித் தொகையிலிருந்து வட மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப் படவுள்ளன என்றும் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறினார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து முன்னுரிமை அடிப்படையில முதற்கட்டமாக ஐந்து பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியமைச்சர் சரணிமல ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கான பாடசாலைகள் மாகாணக் கல்வித் திணைக்களங்களின் மூலமாகத் தெரிவுசெய்யப்படவுள்ளன என கல்வியமைச்சர் மேலும் கூறினார்.

# கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள்; மறுக்கிறது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

மட்டக்களப்பு,செப்.1

கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் உருவாகிவருவதாக வெளியாகிவரும் செய்திகளை முஸ்லிம் காங்கிரஸ் நிராகரித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் மூலம் முஸ்லிம் மக்கள் மீது சர்வதேச சமூகத்தின் தவறான பார்வையை ஏற்படுத்த முயல்வதாகத் தெரிவதாக அக கட்சியின் செயலாளர் ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

ஒஸாமா பின்லேடன், சதாம் ஹுசைன் முதலானோரின் பெயர்களைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் இளைஞர்கள் ஆயுதக்குழுக்களை உருவாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை எனத் தெரியவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதமேந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஒரு போதும் அனுமதிக்காது எனவும் -

ஜனநாயக வழிமுறையினூடாகவே உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதில் தமது கட்சி நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அதிலேயே தா[ம்] உறுதியாக இருப்பதாகவும் அவ[ர்] மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-12

# குண்டுத் தாக்குதலுக்கு பழி வாங்குவோம்; லட்சக் கணக்கான ஈராக்கியர்கள் சபதம்!

## அமெ. படையின் நிர்வாகம் ஆட்டம் காண்கிறது

பக்தாத்,செப்.1

ஈராக்கில் மசூதியில் தொழுகை நடத்திவிட்டு வெளியேறியவர்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட, ஷியா முஸ்லிம்களின் தலைவர் அல் ஹக்கிமின் இறுதி அஞ்சலி ஊர்வலத்தில் லட்சக்கணக்கானோர் பங்குபற்றினர்.

ஆத்திரமுற்றிருந்த அவர்கள் அனைவரும், அஞ்சலி ஊர்வலத்தின் போது இத்தாக்குதலுக்கு பழிக்குப்பழி வாங்கப் போகிறோம் என்று உரத்த குரலில் சூளுரைத்தனர்.

அஞ்சலி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் 'இஸ்ரேல் ஒழிக', 'அமெரிக்க, பிரிட்டிஷ் படையினரே இத்தாக்குதலுக்குப் பொறுப்பு', 'பாத் கட்சி ஒழிக' என்ற சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

கார்க் குண்டு வெடித்த இடத்திற்கு அஞ்சலி ஊர்வலம் வந்தபோது, ஊர்வலத்தில் பங்குபற்றிய அனைவரும் கதறி அழுதனர்.

"எங்கள் தலைவர் கொல்லப்பட்டதற்கு நாங்கள் பழிவாங்குவோம்" என்று அவர்கள் அனைவரும் அங்கு சபதம் எடுத்துக்கொண்டனர்.

அமெரிக்கப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கிவந்த அல்-ஹக்கீமை சதாமின் பாத் கட்சி ஆதரவாளர்களே கொன்றுள்ளனர் என்றும் -

அமெரிக்க கூட்டுப் படைகளால் ஈராக்கில் ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட முடியாது என்றும் - அஞ்சலி ஊர்வலத்தில் சென்றவர்கள் ஆத்திரத்துடன் கூறினர்.

இதற்கிடையே இந்த குண்டுவெடிப்புடன் தொடர்புடைய நான்கு பேரை அமெரிக்கப் படையினர் கைதுசெய்துள்ளனர். இவர்களில் இருவர் சதாமின் விசுவாசிகள். ஏனைய இருவரும் சவூதி அரேபியர்கள்.

மேற்படி குண்டுத் தாக்குதலையும், ஈராக்கின் ஸ்திரத்தன்மையையும் சீகுலைக்கும் நடவடிக்கையில் தாம் ஈடுபட்டோம் என்பதை அவர்கள் தமது வாக்குமூலத்தில் கூறியுள்ளனர் என்று நஜாப் நகர ஆளுநர் ஹெய்டர் மெடி மடார் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்கப் படையினரால் ஈராக்கை நிர்வகிக்க முடியாது என்றும் அவர்களின் நிர்வாகம் ஈராக்கில் ஆட்டம் காண்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

(ஒ)

## ஈராக்கில் அல்-கெய்டாவாம்!

ஈராக்கில் நடந்த கார் குண்டுத் தாக்குதலில் பின்லேடனின் அல்-கெய்டா தீவிரவாத இயக்கத்தின் பங்கும் உண்டு என்று அமெரிக்கப்படை அறிவித்துள்ளது.

இத்தாக்குதல் குறித்து கைது செய்யப்பட்டுள்ள சவூதி அரேபியர்கள் இருவரும் தாம்-அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர் என்று நஜாட் நகர ஆளுநர் தெரிவித்துள்ளார்.


ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பியோடிய அல்-கெய்டா தீவிரவாதிகள் ஈரானில் தஞ்சம்புகுந்திருந்தனர் என்றும் -

அவர்கள் தற்போது ஈராக்கில் சதாம் ஹீசைனுக்கு ஆதரவானவர்களுடன் சேர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்றும் -

அமெரிக்கப் படையினர் மேலும் கூறியுள்ளனர்.

கார் குண்டுத் தாக்குதலை அடுத்து ஈராக்கின் நிர்வாகத்தை ஐ.நா.பொறுப்பேற்குமானால் சர்வதேச அமைதிப் படையை அங்கு அனுப்பமுடியும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார். ஆனால், பிரான்ஸும், ஜேர்மனும் ஈராக்கிற்கு அமைதிப்படைகளை அனுப்ப மறுப்புத் தெரிவித்துள்ளன.

அதேவேளை, ஈராக்கில் துருக்கிப் படையினரையும் பணியில் ஈடுபடுத்தும் நோக்கில் அமெரிக்கத் தூதுக்குழு பேச்சு நடத்தவிருக்கின்றது.



ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் தலைவர் அல் ஹக்கிமின் இறுதி ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## பஸ் கவிழ்ந்து கோரவிபத்து; இந்தியாவில் 38 பேர் மரணம்!

இந்தியாவின் இமாச்சல் பிரதேசத்தில் பஞ்சாப் மாநில போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை தடம் புரண்டு கால்வாய்க்குள் விழுந்ததில் அதில் பயணித்த 35 பேர் உயிரிழந்தனர்.

விபத்துக்குறித்து அறிந்ததும் மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். கால்வாயக்குள் சடலங்களைத்தேடும் பணி நடைபெற்று வருகின்றது. இதுவரை 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

விபத்தில் சிக்கிய பஸ்ஸில் எத்தனைபேர் பயணித்தனர் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. ஆனால், 38 பேர் அதில் இருந்தனர் என்பது உறுதியாகியுள்ளது.

எனினும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இந்த கோரவிபத்துக்குறித்து பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

## அமெ.இராணுவக் கல்லூரியில் பெண்கள் மீது வல்லுறவு

வாஷிங்டன்,செப்.1

அமெரிக்காவில் ராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சேரும் பெண்களில் 12 சதவீதம்பேர் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாவதாக தெரியவந்துள்ளது.

கொலரேடோவில் உள்ள இராணுவக் கல்லூரியில் பாலியல் ரீதியில் பெண்கள் பாதிக்கப்படுவதாக புகார்கள் கூறப்பட்ட போதிலும் அக்கல்லூரியின் தலைவர் அது பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து பாதுகாப்புத் துறையின் உயரதிகாரி பயிற்சி பெற்று வந்த 579 பெண்களிடம் மேமாதம் விசாரணை நடத்தினார். மூத்தமாணவர்களால் தாங்கள் பாலியல் வல்லுறவுக் குட்டுத்தப்பட்டதாக அவர்களில் 43 பெண்கள் கூறினர். பாலியல் ரீதியில் தாங்கள் துன்புறுத்தலுக்கு ஆளானதாக 109 பெண்கள் கூறினர். இதுபற்றி புகார் கூறியதற்றாக தாங்கள் தண்டிக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

இதையடுத்து இராணுவக் கல்லூரியின் தலைவர், பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

### கொலம்பிய கிளர்ச்சியாளரால்

## கடத்தப்பட்ட வேட்பாளர் அரசிடம் கோரிக்கை விடுப்பு

கொலம்பியாவில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட அதிபர் பதவி வேட்பாளர் பெற்றன்கோட், தன்னை விடுவிக்க உதவும்படி அரசைக் கோரியுள்ளார். இவரது கோரிக்கை பதிவுசெய்யப்பட்ட வீடியோ ஒளிநாடா கொலம்பியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

பெற்றன்கோட் உயிருடன் இருக்கிறார் என்பது இந்த ஒளிநாடா மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள இவர், தன்னை விடுவிப்பதற்கு கொலம்பிய அரசு, அரசியல் ரீதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் பெற்றன் கோட்டை விடுவிக்க முயன்று அநியாயமாக உயிர்ப்பலிகளை எடுக்க வேண்டாம் என இவரின் குடும்பத்தினர் கேட்டுள்ளனர். தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை இவர் கிளர்சியாளர்களால் கடத்தப்பட்டிருந்தார்.

(ஒ)

## புற்றுநோய்க் கட்டியை வெட்டியபோது முதியவரின் ஆணுறுப்பும் துண்டிப்பு

முதியவர் ஒருவரின் சிறுநீர்ப்பையில் உருவாகிய புற்றுநோய்கட்டியை அகற்றிய மருத்துவ நிபுணர்கள் தவறுதலாக ஆணுறுப்பையும் வெட்டி அகற்றிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

சிறுநீர்ப்பையில் புற்றுநோய் ஏற்பட்டதால் சிகிச்சை பெறுவதற்காக 67 வயதான முதியவர் மருத்துவமனைக்குச் சென்றார் அங்கே அவருக்கு சிகிச்சை நடந்தது.

சிகிச்சையின்போது சிறுநீர்ப்பையில் உருவாகிய புற்றுநோய்க்கட்டியை வெட்டி அகற்றிய வைத்தியர்கள் நோயாளியின் ஆணுறுப்பையும் தவறுதலாக வெட்டி அகற்றினர்.

சிகிச்சையின் பின் மயக்கம் தெளிந்து எழுந்தபோதுதான் தனது ஆண்குறி வெட்டி எடுக்கப்பட்டிருப்பது நோயாளிக்குத் தெரியவந்தது.

இதனால், நஷ்டஈடு கோரி நீதிமன்றத்தில் அந்த முதியவர் வழக்குத் தொடர்ந்தார். எட்டு ஆண் நீதிபதிகள, நான்கு பெண் நீதிபதிகள், என பன்னிரண்டு நீதிபதிகள் முன்னிலையில் நடந்த இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பில் ஆண்குறி வெட்டப்பட்டதால் பாதிப்புற்ற நோயாளிக்கு ஐம்பது கோடி ரூபா நஷ்டஈட்டை சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் வழங்கவேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### மும்பையைத் தொடர்ந்து

## டில்லியில் நாசவேலை நடத்த முஸ்லிம் தீவிரவாதிகள் திட்டம்!

### இந்திய புலனாய்வுத்துறை எச்சரிக்கை

இந்தியாவின் மும்பை நகரில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து தலைநகர், புதுடில்லியிலும் நாசவேலைகளில் ஈடுபட தீவிரவாத அமைப்புகள் திட்டம் தீட்டியுள்ளதாக இந்திய புலனாய்வு அதிகாரிகள் அரசை எச்சரித்துள்ளனர். இதனையடுத்து புதுடில்லியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் புலாந்தர் சாஹர் மாவட்டத்தில் உள்ள செகந்திராபத் என்னுமிடத்தில் இரண்டு ஜெய் இமுஹமது இயக்கத் தீவிரவாதிகள் இரண்டு பேரை நேற்றுக் காலை பொலீஸார் கைதுசெய்தனர்.

அப்டீக்முஹமது, ன்ரன் அஹமது ஆகிய அந்த இரண்டு பேரிடமிருந்து 23 மின்னியல் 'டெட்டனேட்டர்கள்', அவற்றை வெடிக்க வைக்கும் 'ரிமோட்' கருவிகள் மற்றும் 86 ஆயிரம் ரூபா இந்தியப் பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இதுதவிர நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் புதுடில்லி சதர் பஜார் பகுதியில் ஏராளமான வெடிப்பொருள்கள் மற்றும் ஆயுதங்களுடன் சென்ற 'டிரக்' ஒன்று பிடிபட்டது. 'டிரக்'கில் வந்த மூவர் பிடிபட்டனர்.

இந்த மூவர் கொடுத்த தகவலின் பேரில் இப்பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக டில்லி நிஜாமூதீன் பாலம் அருகே உள்ள இந்திரபிரஸ்தா பூங்காவில் பதுங்கி இருந்த இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

டில்லி ரயில் நிலையத்தில் 21 கிலோ வெடிபொருள்கள் மீட்கப்பட்டமை, டில்லியில் ஒரு வீட்டில் பதுங்கி இருந்த ஜெய் இமுஹமது அமைப்பின் தலைமைத்தளபதி காஸி பாபா உட்பட 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டமை, இந்திர பிரஸ்தா பூங்காவில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டமை, வெடிபொருள்களை ஏற்றிச்சென்ற 'டிரக்' பிடிபட்டமை, உத்திரபிரதேச மாநிலத்தில் இரண்டு தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டமை என 2 நாளகளில் ஏராளமான சம்பவங்கள் நடந்து முடிந்ததையடுத்து புதுடில்லியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.



விநாயக சதுர்த்தியை முன்னிட்டு இந்தியாவின் மும்பை நகரில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலை.


## தைவானில் தீ விபத்து!

தைபே,செப்.1

தைவானில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தீவிபத்தில் 13 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்; 70 பேர் காயமடைந்தனர்.

தலைநகர் தைபெயின் லூஜோ பகுதியில் உள்ள 8மாடிக் கட்டடத்திலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

உள்ளூர்நேரப்படி சனிக்கிழமை அதிகாலை 2மணிக்கு இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் தீப்பிடித்தது. குடியிருப்பாளர்களின் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்திலேயே முதலில் தீ பிடித்ததாகக் கூறப்படுகிறது.



**வெய்யில் கொடுமைக்கு பிரான்ஸு நாட்டில் பலியானவர்கள் எண்ணிக்கை 11 ஆயிரத்தை தாண்டிவிட்டது. இன்னும் வெய்யிலின் உச்சம் தணியவில்லை. அனல் காற்றுக்கும் வெய்யில் காரணமாக ஏற்படும் நோயிலும் இறப்பவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகமாகக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. சுகாதாரத்துறை மக்களை காப்பாற்ற போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற புகார் எழுந்துள்ளது. வெய்யில் 108 பாகைக்கு மேல்கொளுத்துகிறது. நோவா இசாரியா கடற்கரையில் மக்கள் கூட்டம் அலைமோதும் காட்சி.**

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டானிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்த விதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்.

(21-11-18) **மணிசாமி P.T.R. ஈஸ்வரி அம்மா** (22075)

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)
இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில், பெருமாள் கோயிலடி.)
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.


## பெயர் மாற்றம்

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி என்ற விலாசத்தில் வசிக்கும் சீனியன் பாஸ்கரன் ஆகிய நான் எனது பெயரை 2003.04.06ஆம் திகதி தொடக்கம் **திரு.ஏ.வி.எஸ். பாஸ்கர் (A.V.S. Basskar)** என சட்ட வரம்புக்கு அமைய மாற்றுகின்றேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இதே பெயரை உபயோகிப்பேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(21908)(21-11-18) **திரு.ஏ.வி.எஸ்.பாஸ்கர்**

## அடிக்கல் நடும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது

திடற்புலம் கிராம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள வீடுகளுக்கான அடிக்கல்லை கடந்த 29-08-2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு **மாண்புமிகு இந்து கலாசார கௌரவ அமைச்சர் திரு.தி.மகேஸ்வரன் அவர்கள் நட்டுவைத்தார்**
இந்தத் திட்டமானது சிறப்புற நிறைவேறி மக்கள் பூரண நலனடைய வேண்டுமென ஒளி நிலா சன சமூக நிலையத்தினராகிய நாம் வாழ்துக் கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

திடற்புலம். *ஒளி நிலா சனசமூக நிலையத்தினர்.* (22078)(21-11-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலகத்தின் கலாசார அலுவலர்
**திருமதி மைதிலி விசாகரூபன்**
அவர்களின் அன்புத் தாயாரான
**திருமதி சரஸ்வதி கணநாதன்**
அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

நல்லூர் சங்கம்.
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். (22082) (26-21-11-18)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 08 - 03 - 1966 | ஆண்டவன் அடியில் 19 - 07 - 2003

### அமரர் இரத்தினம் செல்வராசா
(குட்டி)

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் விளங்கிய
குட்டியே — நீங்கள்
மண்ணுலகில் இருந்து விண்ணுலகு சென்று
45 நாள்கள் சென்றனவோ.
உங்கள் நினைவுகள் எம்மனக்கண் முன்
என்றுமே நீங்காதுள்ளது
"உம் வழியில் நாம் இறைவழி செல்வோம்"

*முகவரி:*
*கொத்துக்கட்டி லேன்,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (C/29896)(21-11-18)

ஆபரத்தில் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மாமா, மாமி குடும்பம்.

## சனசமூக நிலைய உறுப்பினர்கள் ஒன்று கூடல்

ஊர்காவற்றுறை,செப்.1

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூகநிலையங்களுக்கிடையிலான ஒன்றுகூடல் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊர்காவற்றுறை அரசியல் துறைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்று கூடலில் நாட்டின் அசாதாரண நிலை காரணமாக இயங்கிய, இயங்காத சனசமூக நிலையங்களின் முக்கிய தேவைகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அத்தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப் படவுள்ளது. (எ-16)

## கட்டுரைப் போட்டி

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள சிறுவர் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பணிப்பாளரின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளது.

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 13 வரையிலான சகல மாணவர்களும் பங்குபற்றக்கூடிய விதத்தில் நான்கு பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-135)

## இலையான் தொல்லை பரவலாக அதிகரிப்பு

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள ஹோட்டல்கள், தேநீர்க்கடைகள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றில இலையான்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இலையான்கள் மூலம் தொற்று நோய்கள் ஏற்படுமாகையில் உணவுப் பண்டங்களை சரிவர மூடி சுகாதார முறைப்படி பாதுகாக்குமாறு சுகாதார பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-135)

## கூட்டுறவுக்கிளை புதிய இடத்தில்

யாழ்.பலநோ.கூ.சங்கத்தின் 21ஆம் இலக்க குண்டுக்குளி கிளை புதிய இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கச்சேரி - நல்லூர் வீதியில் 'புளுறிபன்' ஹோட்டலுக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் இந்தக் கிளை தற்போது இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-30)


## தேவை

யாழ்.நகரில் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு ஆள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு:
விளம்பர இல.2010,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.
(21-07-18)

## வேலையாள்கள் தேவை

யானை மார்க் சோடா பெட்டிகளை இறக்கி ஏற்றுவதற்கான கூலி ஆள்கள் தேவை.
உடன்தொடர்பு கொள்ளவும்:
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
21, மானிப்பாய் வீதி,
(25-11-15) யாழ்ப்பாணம். (21971)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459 (21705)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி, சரசாலை வடக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நில அளவைத் திணைக்கள அத்தியட்சகரும், உத்தரவு பெற்ற நில அளவையாளருமாகிய
**உயர்திரு. தம்பிஐயா சபாநாயகம்** அவர்கள்
(முன்னாள் சரசாலை கிராமோதய சபைத் தலைவரும், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபை உறுப்பினரும், சாவ.கைத்தொழில் வணிகர் மன்ற செயலாளரும், வடபகுதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கத் தலைவரும், தற்போது சரசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் சரசாலை வடக்கு பாலர் முன்பள்ளி அமைப்பாளரும், யா/சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய அபிவிருத்திச் சபை செயலாளரும், இன்னும் பல பொது நிறுவனப்பணிகளில் முன்னின்று உழைப்பவர்)

தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக 2003.08.29 அன்று யாழ்.மேலதிக மாவட்ட நீதிபதி உயர்திரு. **பா.சுப்பிரமணியம்** அவர்கள் முன்னிலையில் பதவிப் பிரமாணமும், பதவிக்காப்புப் பிரமாணமும் செய்து பதவியேற்றுக்கொண்டார்.
அவர் தம் மக்கள் சேவை தொடர இறையை வேண்டி மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்,
ச.சத்துருசங்காரம் (செவ்வந்தி)
பீ.என்.சற்குணராசா (பைந்தமிழ்)
(C/29895)(21-11-18)

உ
கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய
## மஹோற்சவ கால சின்னம்மா மட அன்னதானம் - 2003

முருகன் அடியார்களே!
கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவ காலத்தில் வழிபட வருபவர்களுக்கு 10 தினங்களும் வருடந்தோறும் அன்னதானம் வழங்க காலஞ்சென்ற **செல்லத்தம்பி அப்பையா** அவர்களது நல்லெண்ண அடிப்படையில் செய்த ஏற்பாட்டின்படி இன்று (01.09.2003) திங்கட்கிழமை தொடக்கம் (10.09.2003) புதன்கிழமை வரை சின்னம்மா மடத்தில் அன்னதான வைபவம் நடைபெற முருகப் பெருமான் அருள் பாலித்துள்ளார். 10 தினங்களும் முருகன் அடியார்கள் அனைவரும் அன்னதான வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
சு.செல்வரத்தினம்
*நம்பிக்கைப்பொறுப்பாளர் அன்னதானக்குழு.*
*கொக்குவில்.* (22081)



உ
கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு
ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார் கோயில்
(காளி கோயில்)

## வருடாந்த மஹோற்சவம் - 2003
(01.09.2003 முதல் 10.09.2003 வரை)

நிகழும் ஆவணித்திங்கள் 15ஆம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகின்றது.
08.09.2003 திங்கட்கிழமை சப்பரத்திருவிழா இரவு 7.00மணி
09.09.2003 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா காலை 4.00 மணி
10.09.2003 புதன்கிழமை தீர்த்தத் திருவிழா காலை 10.00 மணி
11.09.2003 வியாழக்கிழமை பூங்காவனத்திருவிழா மாலை 6.00மணி

உற்சவ காலங்களில் தினமும் மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை
தெய்வீகப்பேருரை **மகாபாரதம்**
நிகழ்த்துபவர்: இரா. செஞ்சொற்புரவலர் செல்வவடிவேல் ஆசிரியர்
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

– ஆலயகுருவும்,
உபயகாரர்களும்
(22076) (26-21-11-18)

## 27ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 - 05 - 1914 | உதிர்வு 30 - 08 - 1976

### அமரர் இராமலிங்கம் செல்லையா
(ஸ்தாபகர், சன்லைற் றைக்கிளீனர்ஸ், யாழ்ப்பாணம்)

*அன்போடும் பண்போடும்*
*எம்மை வளர்த்து ஆளாக்கிய*
*எம்பாசமிகு தந்தையே*
*ஆண்டுகள் இருபத்தியேழு ஆனாலும்*
*நாம் வாழும் வரை*
*எம் உயிருடன் கலந்திருப்பீர்.*

10/2, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(22072) (26-21-11-18)

# உதயன்

## பிரதமர் ரணிலின் இக்கட்டான நிலை

வடக்கு- கிழக்கு இடைக்கால நிர்வாக சபை அமைப்பதற்கான மாற்று ஆலோசனைகளை அரசுக்குச் சமர்ப்பிப்பதற்காக விடுதலைப் புலிகள் பாரிஸில் கூடி சட்ட வல்லுநர்களின் உதவியுடன் தயாரித்து முடித்துவிட்டனர்.

இனி விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் வன்னியில் கூடி ஆலோசனைகளை ஆராய்ந்த பின்னர் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அங்கீகாரம் அளித்ததும் அந்த ஆலோசனைகள் நோர்வே ஊடாக இலங்கை அரசுக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

அந்த ஆலோசனைகள் பற்றிய விவரம் அவற்றைத் தயாரித்தவர்களையும், தேசியத் தலைவர் பிரபாகரனையும், புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மையும் தவிர வேறு எவருக்கும் தெரியாது.

ஆயினும், ஆலோசனைகளை பரீஸில் வைத்து தயாரித்த குழுவின் முக்கியஸ்தர்களான தமிழ்ச்செல்வனும், கேணல் கருணா அம்மானும் தெரிவித்திருக்கும் சில கருத்துக்கள், ஆலோசனைகள் எப்படி இருக்கும் என்பதை ஊகிக்க வைக்கின்றன.

புலிகளின் ஆலோசனைகள் பற்றி எதுவும் தெரிவதற்கு முன்னரே சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இனவாத சக்திகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கிவிட்டன.

ஜே.வி.பியினர் காலியிலிருந்து கொழும்பு வரை பாத யாத்திரை நடத்தி இடைக்கால நிர்வாக சபைக்கும அரசு - புலிகள் சமாதான முயற்சிகளுக்கும் எதிர்ப்புத்தெரிவித்தனர்.

அம்பாறை நகரில் நாட்டைப் பாதுகாப்பவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

புலிகளின் ஆலோசனைகள் இன்னும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படாவிட்டாலும் அவை பற்றிக் கசிந்துள்ள மேலோட்டமான விவரங்கள் வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்த மாதிரியாகிவிடலாம். சமாதானப் பிரியர்களின் அச்சம் இது.

வடக்கு - கிழக்கு முழுவதையும் நிர்வகிக்கக் கூடிய அதிகாரமுடைய இடைக்கால நிர்வாக சபை இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அந்தச் சபையை அமைப்பதில் அர்த்தமில்லை என்றார் தமிழ்ச்செல்வன்.

அத்துடன், காணி மற்றும் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டும் அதிகாரம் இடைக்கால நிர்வாக சபைக்குக் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று சட்ட வல்லுநர்கள் வலியுறுத்தியதையும் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசைப் பொறுத்தவரையில் காணி, பொலிஸ், பாதுகாப்பு (சட்டம்,ஒழுங்கு),இறைவரி அறவிடல் தொடர்பான அதிகாரங்களை இடைக்கால நிர்வாக சபைக்கு வழங்கும் எண்ணம் இல்லை. இந்த அதிகாரங்கள் மத்திய அரசிடமே இருக்கும் என்று புலிகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்த ஆலோசனைகளில் அரசு திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

உள்ளூர் போர் நடந்த உலக நாடுகள் பலவற்றிலும் போரை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காண்பது வரையிலான காலத்து இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்ட போது அதற்கு முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டன என்பதே வரலாறு என்றும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்த நடைமுறையை சர்வதேச சமூகம் நன்கு அறியும். இந்த நிலையில், தாங்கள் தயாரித்துள்ள ஆலோசனைகளை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று தாம் நம்புவதாக தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார்.

ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்கிறதோ இல்லையோ உண்மை நிலை சர்வதேச சமூகத்துக்குத் தெரிய வந்துவிடும். அதாவது, புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவை; தமிழ் பேசும் மக்களின் நலனுக்கு தேவையானவை என்பதைச சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் என்று கருணா அம்மான் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கு இனவாத சக்திகளின் நெருக்குதல் ஒரு புறம். மறுபுறத்தில் அரசுக் கட்சியில் இருப்பவர்கள் ஒரு சாராரின் நெருடல் வேறு.

இந்த இரண்டு சாராரையும் ஓரளவேனும் திருப்திப்படுத்தத் தவறினால் ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு வங்கி வரண்டு விடும். அடுத்த தேர்தலில் கூடுதல் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற கனவு நனவாகாது.

இதுதவிர, இடைக்கால நிர்வாகம் இந்தக் கட்டத்தில் கூடாது என்று கூத்தாடும் ஜனாதிபதி இடைக்கால நிர்வாக சபைக்கு எல்லா அதிகாரங்களும் வழங்கப்படுகின்றன என்றால் சும்மா பார்த்துக் கொண்டு இருப்பாரா? எப்பொழுது ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று தருணம் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதி உடனே காரியத்தில் இறங்கமாட்டாரா என்ன?

அதேவேளை, புலிகளின் ஆலோசனைகளை அரசு நிராகரித்தால் சமாதானப் பேச்சும் இல்லை. பிரச்சினைக்கு தீர்வும் இல்லை என்றாகிவிடும். எந்த நேரத்திலும் மீண்டும் போர் வெடிக்கலாம். அதை நாடு தாங்குமா? மக்கள் விரும்புவார்களா?

பிரதமர் ரணில், உண்மையில் இக்கட்டான நிலையிலேயே உள்ளார் என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். எந்த நிலைமையையும் சமாளித்து வெற்றிவாகை சூடக்கூடிய அரசியலவாதிதான் உண்மையான தலைவராக மிளிரமுடியும்.

### மட்டக்களப்பில் செப்.5 இல்

# தமிழின உயிர் கொலை நாள் அனுஷ்டிக்க விரிவான ஏற்பாடுகள்

மட்டக்களப்பு பெருமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 5ஆம் திகதி தமிழ் இன உயிர் கொலை நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

போரின்போது படுகொலைசெய்யப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் மேற்படி திகதியில் இந்தத் தமிழின உயிர் கொலை நாள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வுகளுக்குப் பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள் பூரண ஆதரவு வழங்கவேண்டும் என்றும் - கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தசாப்த காலத்தில் ஸ்ரீலங்காப் படைகளாலும், ஊர்காவல் படைகளாலும் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகள் தமிழர் என்ற காரணத்தினாலே படுகொலை செய்யப்பட்டனர் என மட்டக்களப்பு மாவட்ட பெருமன்றம் விடுத்த செய்திக்குறிப்பி[illegible]ப்பட்டுள்ளது.

1990[illegible]ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் செப்ரெம்பர் 5ஆம் திகதி 158 தமிழ் அகதிகளும், 9ஆம் திகதி சத்துருக் கொண்டான் பிள்ளையாரடியில் சிறிவஞ்சியந்தியடிக் கிராமங்களைச் சேர்ந்த 184 பொதுமக்களும், 23ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் மேலும் 16 பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைகள் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் உறவுகளை நினைவுகூரும் வகையாக இந்த தமிழ் இனப்படுகொலை நாள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தினத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் மணி ஒலி எழுப்பப்பட்டு, காலை 7 மணிக்கு விசேட பூசைகளும் நடைபெறவுள்ளன. சகல களியாட்ட நிகழ்வுகளையும் தவிர்த்து கிராமங்களிலும் முக்கிய சந்திகளிலும் சோக இசை ஒலி பரப்பப்படுவதுடன், பொதுக்கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள், வீதிகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படவுள்ளன. பாடசாலைகளில் அன்றையதினம் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (எ)

# அனுமதி இன்றி மாடு வெட்டுவோர்மீது ஊர்காவற்றுறையில் கடும் நடவடிக்கை

### பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் அனுமதியின்றி இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஊர்காவற்றுறை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழவன்.

ஊர்காவற்றுறை பிரதேசத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த புதனன்று ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் ஜேஎக்ஸ்செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழவன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோதமாக இறைச்சிக்கு மாடுகளை வெட்டும் சம்பவங்கள் அண்மைக்காலமாக ஊர்காவற்றுறை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்துள்ளதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்தவண்ணம் உள்ளன.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாக மாடுகளைத் திருடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகக் கால்நடை வளர்ப்போரும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, கால்நடைகள் திருடப்படுவது மற்றும் அனுமதியின்றி இறைச்சிக்காக வெட்டப்படுவது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பாக கிராம அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இது விடயத்தில் கூடிய கவனம் எடுத்துச்செயற்படவேண்டும்.

சட்டவிரோதமாக மின்பாவனை பெறுவோரின் எண்ணிக்கையும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் அதிகரித்துள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட பகுதி கிராம அலுவலர்கள் தலையிட்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ புளியங்கூடல் சந்தியிலிருந்து சின்னமடு வரையும் மின்சார இணைப்பு விஸ்தரிக்கப்படவேண்டும்.

★ ஊர்காவற்றுறை நகரப் பகுதிக்கு இரவு வேளைகளில் வழங்கப்படும் மின்சாரத்தை மேலும் ஒரு மணி நேரத்துக்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்.

★ யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு காலை 11.15 மணிக்கு புறப்பட வேண்டிய 777ஆம் இலக்க பஸ் சேவை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இதனை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

★ பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வினை மேற்கொள்ளுதல்.

★ எழுவைதீவு பிரதான வீதியைப் புனரமைக்க உடன் நடவடிக்கை எடுத்தல்.

★ பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை அந்தந்த நிறைவேற்று நிறுவனங்களைக் கொண்டு குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுதல். (எ-76)

### முல்லைத்தீவுப் பிரதேசத்தில்

# 2000 ஆண்டுகள் புராதனமான சுடுமண் வளையங்கள் மீட்பு!

கிளிநொச்சி,செப்.1

முல்லைத்தீவில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த புராதன சுடுமண் வளையக் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் தண்ணிமுறிப்பில் மீளக்குடியமர்ந்த மக்கள் புதிதாக கிணறு ஒன்றை வெட்டினர். அப்போது இரண்டரை அடி விட்டத்தில் 8 அடி ஆழம் தோண்டப்பட்டபோது அதனுள் 2 அடி விட்டத்தில் 1 அடி உயரமுடைய 3 சுடுமண் வளையங்கள் சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

கிணறு அமைக்கப்பட்ட காலத்தின்பின் அதன் மேல் 3 அடி உயரத்திற்கு வண்டல் மண் படிந்துள்ளது. 2 ஆயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்டதாக இது இருக்கும் எனக் கருதப்படுகின்றது. 1885இல் முல்லைத்தீவு நகரின் வடக்கில் இத்தகைய சுடுமண் வளையக் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

பூநகரி கிராஞ்சியில் 2 ஆயிரத்து 800 ஆண்டுகள் தொன்மையானதென 'காபன்-14' காலக்கணிப்பு செய்யப்பட்ட சுடுமண் கிணறு இன்றும் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. முன்னர் யாழ்ப்பாணம் வல்லிபுரத்தில் ஒரு சுடுமண் கிணறு இலங்கை தொல்லியல் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் அஸ்தினாபுரத்திலும் தமிழகத்தில் திருநெல்வேலி, காயல் ஆதிச்ச நல்லூர், ஆற்காடு, செங்கமேடு ஆகியவற்றில் 2 ஆயிரத்து 800 ஆண்டுகள் தொன்மையான சுடுமண்வளையக கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போது தண்ணிமுறிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் வளையக்கிணறு, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெஇளங்குமரனின் ஒருங்கிணைப்பில் தொல்லியல் தேடளாளர் ந.குணரட்ணம் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது.

### நாளை

ஆவணி 16
செவ்வாய்க்கிழமை
(02.09.2003)
திதி : பஞ்சமி
பிற்பகல் 2.37 வரை
நட்சத்திரம : சுவாதி
பின்னிரவு 12.18 வரை
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 12.05 - 1.35
ராகுகாலம்: 7.35-9.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன்னம்பிக்கை அதிகமாகும் போது மனிதன் தவறிழைக்க ஆரம்பிக்கின்றான்.

# காணாமற் போனோர் குறித்த விசாரணை அறிக்கை விரைவில்

### சமர்ப்பிப்பு என்கிறார் அதிகாரி

குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக விசேட குற்றப்புலனாய்வுப் பொலீஸார் கடந்த சில வருடங்களாக மேற்கொண்டு வந்த விசாரணைகளின் அறிக்கை விரைவில் பொலீஸ்மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படவிருப்பதாக யாழ். பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2001ஆம் ஆண்டிலிருந்து குடாநாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களில் அவ்வப்போது இந்த விசாரணைகள் நடைபெற்று வந்தன. குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசேட குழுக்கள் கொழும்பிலிருந்து பல தடவைகள் வருகை தந்து காணாமற்போனோரின் உறவினர்கள் மற்றும் இது தொடர்பான சாட்சிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர்.

நீண்டகாலமாக நடைபெற்று வந்த இந்த விசாரணைகளின் முடிவுகள் இதுவரை அறிவிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தமை குறித்து காணாமற் போனோரின் உறவினர்கள் தரப்பில் பல தடவைகள் ஆட்சேபனையும் விசனமும் தெரிவிக்கப்பட்டன.

இந்த விசாரணைகள் தற்போது பூர்த்தி அடைந்து விட்டதாகவும்-

விரைவில் இது தொடர்பான அறிக்கையினை குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் பொலீஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றனர் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் காணாமற்போன சம்பவங்களுடன் தொடர்புடைய படையினர் பலர் பொலீஸ் தலைமையகத்தின் விசேட உத்தரவின்கீழ் கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-4)

### பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கிய

# வலி.வடக்குப் பிரதேசத்திலிருந்து சமுர்த்தி அலுவலர் இடம்மாற்றம்

### இதனால் மீள்குடியமர்வு பற்றி சந்தேகம்

பெரும்பாலான பகுதி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அடக்கப்பட்ட வலி.வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 12 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்று முதல் வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சுமார் 24 கிராம அலுவலர் பிரிவுகளில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இப்பகுதிகளுக்கான கிராம அலுவலர்கள் நிரந்தரமாக வேறு பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் சமுர்த்தி அலுவலர்கள் 12 பேர் தற்போது வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நிரந்தரமாக இப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படப் போவதில்லை என்பதையே இந்த இடமாற்றங்கள் காட்டுவதாக பொதுமக்கள் அச்சம் வெளியிட்டு வருகின்றனர். இத்தகைய இடமாற்றச் செயற்பாடுகள் மீள்குடியமர்வு தொடர்பாக அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக வலிவடக்கு பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. (ஒ-86)

# ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்

14

05

1960



மண்ணின் மடியில்

11

09

2002

## திருமதி ஜெயநாயகி இரகுநாதன்

(பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி)

ஆண்டொன்று மறைந்தாலும் மறவாது உன்பிரிவு
என் அருமைச் செல்வமே! ஜெயநாயகியே!!
பெற்ற பொழுதடைந்த பேரின்பம் தனிலும் – மேலாய்
உவப்படைந்தேன். உனை அயல் மெச்சக்கண்டு
சமூகத் தொண்டுக்கு நீ முன்நின்றால் போதும்
உன் பின்னால் ஊரே வழிமொழியும்.
கோயிலாய்க் குடியிருந்தோம் தீபமாய் நீ ஒளிர்ந்தாய்
நாயகியே நீ ஏன் அணைந்தாய்?

காலம் உருண்டு கணக்குகள் போட்டாலும் – மாறுமோ
ஜெயா உன் நினைவு?
கட்டிய நாள் முதல் கஷ்டங்கள் யானறியேன் – நீ
பசித்திருப்பாய் பட்டினி தெரியாது எனக்கு
செல்வங்கள் இரண்டு தந்தாய்!
தந்தை என் முகம் பார்த்து தாய் உன்னைக் கேட்கின்றார்
தாலிக்கு வரம் கேட்டாய்
தாங்கும் உந்தன் செல்வங்களை நீ மறந்தாய்!
தாங்க முடியவில்லை!
இல்லாளே நீ இல்லாமற் போனாயோ?

கணப்பொழுதும் உனைக் காணாமல் கண்ணுறங்கோம்
நீ கவலையின்றித் தூங்கி விட்டாய்!
கலங்குகின்றோம்.....
கொக்கரித்துக் கோழி குஞ்சுகளைக் கொஞ்சி மகிழ்கையிலும்
துள்ளிவரும் இளங்கன்றைப் பசு உச்சிமுகர்கையிலும் – உம்
நினைவால் நெஞ்சு வெடித்து நெருப்பாய் அனல் பறக்கும்
ஆறவணைக்க நீரல்ல அம்மா
நாம் கண்ணீரில் கரைகின்றோம்
இனிக்காலமெல்லாம் உமைக் காணோமோ?

ஓராண்டு ஓடியதோ சோதரியே நீ ஒளிந்து
எங்கு சென்றாய்? எமைத் தவிக்கவிட்டு – குல விளக்கே!
உனக்கென்ன குறை?
தினம் காலையிலே கண்விழித்து – கோலமிட்டு
விளக்கேற்றிக் கும்பிட்டாய் வைரவரை!
மாலையிலும் மறவாமல் மந்திரங்கள் சொல்வாய்!
வடையாலே சாற்றி ஞானவைரவருக்கு
மடைபோட்ட – பொழுதுகளில்

மார்க்கண்டேயனின் மரணக் குரல் கேட்டு சூலமெடுத்து
சிவன் எமனைக் கொன்ற கதை சொன்னாய்!
நீ மட்டும் கூப்பிட ஏன் மறந்தாய்?
ஒரு கொடிக்கிளையாய்ப் படர்ந்தோம் – துளிர்த்தெழும்
வேளையில் இடையிலே நீ ஏன் ஒடிந்தாய்?
வாடுகிறோம் நான் – சகோதரி
வாழ்வில் இது விதியோ?

எம் கண்ணீரை உனக்குக் காணிக்கை ஆக்குகிறோம்!

அன்னாரின் ஞாபகார்த்தமாக எமது இல்லத்தில் இன்று (01. 09. 2003) திங்கட்கிழமை நடைபெறுகின்ற ஓராண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவால் வாடும் :
அம்மா, கணவர், பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரிகள், மாமா, மாமி,
மைத்துனர், மைத்துனிமார்.

இ. இரகுநாதன்,
63, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி

தொடர்புகளுக்கு :- இரகுநாதன் - தொ.பே:0777-111021, 0777-049879

UTHAYAN Graphics
(22002)

# வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைக்கு அரசின் குளறுபடிகளே காரணம்!

**தற்போதும் அமைச்சர்களுக்கும் திறைசேரிக்கும் நிதி ஒதுக்கீடு தொடர்பான பனிப்போர் தொடர்கிறது. வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதற்கு ஒரு சில அமைச்சர்கள் மேற்கொள்ளும் தீவிர நடவடிக்கைகள் குறித்தும் அவ்விடயத்தில் அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது. ரஞ்ஜித் ஆனந்த ஜயசிங்கா எழுதி 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

எமது நாட்டில், வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை என்பது பொருளாதார ரீதியானதொரு விடயம் என்பதைவிட அரசியல் ரீதியான விடயம் எனக் கூறுவதே பொருத்தமானதாகும். 1948 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை இந்நாட்டில் ஆட்சியிலிருந்த அரசுகள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட முக்கிய அடிப்படைக் காரணமாக அமைந்தது இவ் வாழ்க்கைச் செலவு உயர்வே என்பது பல அரசியல் விமர்சகர்களது கருத்தாகும். ஆனால், 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு - கிழக்கு யுத்தம் ஆரம்பமானதையடுத்து, வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைப் போன்றே யுத்தமும் பொதுத்தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக அமைந்தது.

எவரை அதிகாரத்தில் அமர்த்திய போதிலும், எவ்வளவுதான் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்ற போதிலும், நாட்டின் வாழ்க்கைச் செலவை சரியான வகையில் நிர்வகிக்க முடியாது விட்டால், அவ்வேளையில் பதவி வகிக்கும் அரசின் ஆயுள்காலம் குறுகிவிடும். ஒரு காலத்தில் இந்நாட்டின் வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்த ரீ.பி. இலங்கரத்னா மற்றும் கிங்ஸ்லி விக்கிரமரத்னா போன்ற பல அரசியல்வாதிகளின் அரசியல் பயணம் ஓரங்கட்டப்பட்டமைக்குக் காரணம் வர்த்தக அமைச்சர் என்ற ரீதியில் அவர்கள் சரியான வகையில் வாழ்க்கைச் செலவை நிர்வகிக்காததே என்ற கருத்து நிலவியது.


வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைக்கு இன வேறுபாடு மற்றும் மாவட்ட வேறுபாடு என எதுவும் கிடையாது. வாழ்க்கைச் சுமை, எங்கும் சரி, எவருக்கும் சரி ஒரே விதமானதே. தற்போதைய அரசு ஆட்சியமைத்து இரண்டு வருடங்கள் வரையிலான இக்காலப் பகுதியில் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைக் கையாண்ட விதம் பற்றிச் சிந்தித்தால், இச்சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசு பெரும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியுள்ளதெனக் குறிப்பிடமுடியும்.

அரசு கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கை காரணமாக, வரவு செலவுத் திட்டம் மற்றும் அரசின் அரசியல் அபிலாஷைகள் ஊடாக வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைக்கு விடை காண்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டாக வேண்டியுள்ளது. நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டியது இந்த அரசின் பொறுப்பாகும். இதன்படி, வர்த்தகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளின்றும் அரசு முற்று முழுதாக விலகிக்கொள்ள வேண்டுமென்ற உலகப்பலவான்களின் நிலைப்பாட்டை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால், இவ்வித நிலைப்பாடு காரணமாக, நாட்டில் குறைந்த வருமானம்பெறும் அப்பாவி ஏழை மக்களுக்கு ஏற்படவுள்ள கஷ்டங்கள் தொடர்பாக அரசு அனுதாபத்துடன் சிந்திக்கின்றதா? என நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும். விசேடமாகக் குறிப்பிடுவதானால், வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையில் நடைமுறையிலிருக்கும் பரந்த பொருளாதார கொள்கைக்கு ஏழை மக்கள் பலியாக இடமளித்தல் கூடாது.

வர்த்தக மற்றும் நுகர்வோர் சேவை அமைச்சர் ரவி கருணாநாயகாவுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மிகக் குறைந்த அளவேயாகும் ஒரு புறத்தில், அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கமைய செயற்பட வேண்டியுள்ளது. இன்னொரு புறம், பொதுமக்களுக்கு உதவிகள் வழங்க வேண்டிய நிலை அமைச்சருக்கு ஏற்பட்டுள்ளது. இது இறுக்கமான மோதல் போன்றுள்ளமையால், வர்த்தக அமைச்சர் இம் மோதல்களுக்கு மத்தியஸ்தம் செய்ய வேண்டியேற்பட்டுள்ளது. கடந்த அரசின் பதவிக்காலத்தில் தனியுடைமை உரிமையுடன் 'ஷெல்' நிறுவனத்துக்கு விற்கப்பட்ட கொழும்பு 'சமையல் எரிவாயு' நிறுவனத்தின் நிர்வாகம் காரணமாக இந்நாட்டின் பத்து லட்சத்துக்கும் அதிகமான எரிவாயுப் பாவனையாளர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாக நேர்ந்தது.

தற்போது இந்த எரிவாயு விற்பனையில் மூன்று நிறுவனங்கள் ஈடுபட்டிருப்பதுடன், இவ்வாண்டு முடிவதற்குள் மேலும் இரு நிறுவனங்கள் எரிவாயு விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளன. உலகச் சந்தையில் எரிபொருள்களின் விலைகளுக்கு ஏற்ற விதத்தில் எரிவாயுவின் விலையையும் பெறுவதற்கு, தோற்றுவிப்பதற்கு வர்த்தக அமைச்சர் இரண்டு வருட காலமாக முயற்சிக்க வேண்டியேற்பட்டது. தற்போதுகூட இந்த நிலைமை சீரடையவில்லை. தற்போதைய அரசு பதவியேற்ற பின்னர் அறிமுகம் செய்து வைத்த 'முண்டா' எரிவாயு நிறுவனம் எரிவாயு விற்பனையை ஆரம்பிப்பதற்கு அரசுக்குள் இருக்கும் சில பலம் வாய்ந்தோர் குறுக்கே நின்றனர்.



கடைசியில் சுதந்திரமாக எவரும் எரிவாயு தாங்கிகளில் எரிவாயுவை நிரப்பிக் கொள்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியும் நீதிமன்றத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சில நாள்களின் பின்னர் 'ஷெல்' நிறுவனம் மீண்டும் விலை உயர்வைக் கொண்டு வந்தது. இம் முடிவற்ற மோதலைக் கைவிட விரும்பாத வர்த்தக மற்றும் நுகர்வோர் சேவை அமைச்சர் ரவி கருணாநாயக்க, புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து அண்மையில் ஐந்து வகைப் பொருள்களை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அத்தியாவசியப் பொருள்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். இந்த ஐந்து வகையான பொருள்களுள் சமையல் எரிவாயுவும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இது அத்தியாவசியப் பொருளாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டமையால் முன்னரைப் போன்று இதன் விலையில் எவ்வித அதிகரிப்பையும் மேற்கொள்ள இயலாது. இம்முடிவு அண்மையில் ஏழை பாவனையாளர்களின் நன்மைகருதி வர்த்தக அமைச்சு மேற்கொண்ட பயனுள்ள தீர்மானமாகும்.

வர்த்தக அமைச்சருக்கும் எரிவாயு நிறுவனத்துக்கும் இடையேயான இவ் இழுபறி மோதல்கள் பெரிய அளவிலே விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் இந்நாட்டின் பெரும்பான்மை பாவனையாளர்களை இந்த எரிவாயு விடயம் மட்டும் பாதிப்பதாகக்கொள்ள முடியாது. பால்மா, எரிபொருள்கள், மருந்து வகைகள், சீனி மற்றும் கோதுமை மா போன்ற சாதாரண மக்களின் அன்றாடப் பாவனைக்கான அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தொடர்பாக அரசு கடைப்பிடிக்கும் நடவடிக்கைகள் அவதானிக்கப்பட வேண்டியவை ஆகும். அரசின் வர்த்தக கொள்கைப்படி தற்போது திறைசேரியினால் எரிபொருளுக்கும் மானியம் வழங்க இயலாதுள்ளது. சகல பொருள்களின் விலைகளும் உலக சந்தையின் விலையை அனுசரித்தே நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதே தற்போது திறைசேரி கடைப்பிடிக்கும் கொள்கையாகும்.

இந்நிலைப்பாடு காரணமாகவே பொதுமக்களுக்கான நிவாரணத்தின் தரம் குறைந்து காணப்படுகிறது. நீண்டகால நோக்கில் இது சிறந்த கொள்கையே ஆயினும், கிணற்று விளிம்பில் நிற்கும் பொதுமக்களுக்கு இதனால் எவ்வித பயனும் கிட்டப்போவதில்லை.

இதுதொடர்பாக அரசியல்வாதிகளால் பொதுமக்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. பொதுமக்கள் தமது கஷ்டங்கள் தொடர்பாக வெளிப்படுத்தும் குற்றச்சாட்டுக்களை அரசியல்வாதிகள் திறைசேரியின்பால் திசை திருப்பி விடுகின்றனர். இதனாலேயே கடந்த அரசின் காலத்தில் பனிப்போராக நிலவி வந்த திறைசேரிக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான கொள்கை முரண்பாடுகள் தற்போது தீவிர மோதல் நிலையை அடைந்துள்ளன. முன்னர் உர மானியம் தொடர்பாக திறைசேரியுடன் அமைச்சர் எஸ்.பி.திஸ்நாயகா மேற்கொண்ட மோதல்கள், தற்போது அமைச்சர்களான ரவி கருணாநாயக மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுமக்கள் அரசியல்வாதிகளான தமக்கே அதிகாரம் அளித்துள்ளார்களேயன்றி, அரசின் கீழ் பணிபுரியும் அதிகாரிகளுக்கல்ல என்பதே இந்த அமைச்சர்களது தீர்மானமாகும். ஆகவே, எந்த அளவு உயர் அதிகாரம் கொண்ட உத்தியோகத்தரான போதிலும் அவர் அரசின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக் கடமைப்பட்டவராவார் என்பதே இந்த அமைச்சர்களது வாதமாகும்.

ஆனால், அரசு தீர்மானிக்கும் விதத்தில் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திறைசேரியில் தேவைப்படும் நிதி கிடையாதென அந்த உயர் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனால், நிரந்தரமான மோதல் நிலை உருவாகியுள்ளது.

இது தொடர்பாக எதிரணியினரின் வாதத்தையும் கருத்தில் எடுப்பது அவசியமாகும். அரசு புதுமையான கதையளப்பதாக எதிரணியினர் குற்றம் சாட்டுகின்றனர். நாட்டில் யுத்தம் இடம்பெறவில்லை. அதேசமயம் சமாதானமும் எட்டப்படவில்லை. அத்தோடு, பொதுமக்களுக்கு எதுவித நிவாரணமும் கிட்டுவதில்லை என்பது எதிரணியினரின் வாதமாகும். ஒரு வகையில் இதனை ஒரேயடியாக மறுக்கவும் இயலாதுள்ளது.

தற்போதைய அரசு பதவியேற்ற நாள் முதல் இற்றை வரையில் முன்னைய பொ.ஐ.முன்னணி அரசால் வழங்கப்பட்டு வந்த சமுர்த்தி உதவி நிதிபெறும் குடும்பங்களில் மூன்று லட்சம் குடும்பங்களுக்கான உதவி நிதியை நிறுத்தியது மட்டுமே தற்போதைய அரசு மேற்கொண்ட நடவடிக்கை ஆகும் என ஒரு சமயம் எதிரணியின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்திருந்தார். அதேபோன்று பொ.ஐ.முன்னணி அரசின் ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் ஜனாதிபதியினால் அனுமதிக்கப்பட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வை வழங்காமையால் கொதிக்கும் எண்ணெயிலிருந்து எரியும் அடுப்புக்குள் விழுந்த நிலை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அடுத்துவரும், வரவு செலவுத் திட்டம் மூலம் சம்பள உயர்வு வழங்க விருப்பதாகத் தற்போது அரசு தெரிவித்துள்ளது. ஆனால், அது தொடர்பாகத் திறைசேரியால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை பல அமைச்சர்கள் தற்போதும் எதிர்ப்பதாகத் தெரியவருகிறது.

தற்போதைய அரசுக்கு வெளிநாட்டு உதவி என்ற வகையில் பெருந்தொகை நிதி கிடைத்துள்ளது. பலரது எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அரசு சமாதான நடவடிக்கைகள் முறிவடைய இடமளிக்காது முன்னெடுத்துச் செல்கின்றது. பொருளாதார நிலை தொடர்பான புள்ளி விவரங்கள் திருப்தியளிக்கின்றன. பங்குச்சந்தை நிலைவரத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது. சுற்றுலாத்துறையில் பெருமளவு முன்னேற்றம் உரைப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் திருப்தியளிக்காத போதிலும் எதிர்காலத்தில் தேசிய பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தற்போதைய அரசு பதவியேற்ற வேளையில் ஐந்து வாரங்களுக்கு மட்டுமே போதுமான வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பில் இருந்தது. ஆனால், அது இன்று ஐந்தரை மாதங்களுக்கு நாட்டுக்கு அவசியமான பொருள்களைக் கொள்வனவு செய்யத் தேவையான அளவுக்கு உயர்ச்சி பெற்றுள்ளது. அந்த வகையில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், அரசு வறுமையில் வாடும் பொதுமக்கள் பற்றி மேலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஸ்ரீலங்கா மத்திய வங்கி மற்றும் வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சு ஆகியவை தெரிவிக்கும் தகவல்களின் படி கடந்த சில மாத காலமாக நாட்டின் வாழ்க்கைச் செலவீனம் குறிப்பிட்டதொரு மட்டத்தில் குறைவடைந்துள்ளது. கொழும்பு நுகர்ச்சியாளர்களின் அட்டவணைப்பிரகாரம் கடந்த ஜூன் மாதத்தில் 3439 ஆக விருந்த வாழ்க்கைச் சுட்டெண் ஜூலை மாதத்தில் 3376 என்ற அளவுக்குக் குறைவடைந்துள்ளது. அவ்வாறே மத்திய வங்கியின் அறிக்கையின் படி கடந்த ஜூன் மாதத்தில் 9 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஜூலை மாதத்தில் 8.3 வீதமாகக் குறைவடைந்துள்ளது. ஆனால், அரசு தெரிவிக்கும் துறைகளை விட, சில துறைகளில் செலவினங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக நடுநிலைப் பொருளாதார விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். வர்த்தக மற்றும் நுகர்வோர் சேவை அமைச்சரின் கூற்றுப்படி அந்த அமைச்சு நாட்டில் பொருள்களின் நிலையை இயலுமான வரையில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வியாபாரத்தில் போட்டிகள் மூலம் விலைக் குறைப்பை மேற்கொள்ள முயல்வதாகவும் தெரிய வருகின்றது. தாம் பதவியேற்றவேளை 130 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பால்மா பைக்கற்றை 100 ரூபாவிலிருந்து 110 ரூபா வரைக்குள் விற்பனை செய்வதற்கு ஏதுவாக அமைந்தது, தம்மால் புதிய இரு பால்மா வகைகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்து வழங்க முடிந்தமையே என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் பால்மாவின் விலை உயர்வடைந்தமையால் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தால் 89.50 இற்கு வழங்கப்பட்ட பால்மா பைக்கற்றின் விலை சிறிய அளவிலேயே உயர்வடைந்ததாக அமைச்சர் நம்பியதாகத் தெரிவித்தார்.

அவ்வாறே தாம் மோதிக் கொண்டமையால் எரிவாயு நிறுவனம் அண்மையில் 75 ரூபா விலைக் குறைப்பு மேற்கொண்டதாகவும், தான் தற்போது மருந்து வகைகளை விலைக்குறைப்பு மேற்கொள்ளும் பொருட்டு 'ஸ்ரீலங்கா ஜெனரல் ரேடிங்' நிறுவனத்தினூடாக புதிய திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நியாயமான போராட்டத்தின் மூலம் பொருள்களின் விலையைக் குறைக்க முயல்வதே தனது ஒரே நோக்கமாகுமெனக் குறிப்பிட்ட அமைச்சர், இவ்விடயத்தில் அரச அதிகாரிகளினதோ அல்லது திறைசேரியினதோ ஒத்தாசை எதுவும் தனக்குக் கிட்டுவதில்லை எனவும் தெரிவித்தார். இப்பிரச்சினைக்கு இப்போதிருந்தே தீர்வு காணத்தவறினால், இனிவரும் எஞ்சிய காலத்தில் அரசு இதனை விட அதிக அரசியல் சிக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்பது அமைச்சரின் கருத்தாகும்.

சாதாரணமாக, தற்போதைய உலகப் பொருளாதார நிலைமையில், இப்போதைய பொருள்களின் விலையை குறைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ எவராலும் இயலாது. எனவே, தற்போதைய விலைவாசியை எதிர்கொள்ளும் வகையில் பொதுமக்களது வருமான மட்டத்தை உயர்த்துவதே தற்போது அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாகும். வறிய மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளை விட பெரிய அளவில் வர்த்தகர்களையும் முதலீட்டாளர்களையும் ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலேயே அரசு தற்போதும் ஈடுபட்டு வருகின்றது. அவர்களுக்கு வரிச் சலுகை வழங்குவதுடன், கறுப்புப் பணத்தை பயன்படுத்தும் வகையில் சட்டத்திருத்தங்களை மேற்கொண்டமை மூலம், கடந்த இரு வருடங்களாக இந்த அரசு தனவந்தர்களின் நிதி முதலீட்டுக்கு வழி சமைத்துக் கொடுத்துள்ளது. உயர் மட்ட சமூகத்தின் பணம் நிறைந்து, மீதமாகும் போது அதன் ஒரு பகுதி கீழ் மட்ட சமூகத்துக்கும் பிரயோசனமாகிறது என்பதே யதார்த்தம் என அரசு நம்புவதாக தெரிகிறது. ஆனால் அரசு எதிர்பார்த்த வகையில் பொருளாதார உயர்ச்சி இடம்பெறவில்லை.

அண்மையில் ஸ்ரீலங்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட தாய்லாந்து நாட்டின் பிரதமர் கலாநிதி தக்ஷின் ஷினவத்ரா நமது நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது குறிப்பிடத்தக்க கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்தார். தாய்லாந்தை அபிவிருத்தி செய்ய வேண்டி இருந்தமையால், தான் பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் சர்வதேச நிதியத்திலிருந்து நாடு பெற்றிருந்த சகல கடன் நிலுவைகளையும் திருப்பிச் செலுத்தியதன் மூலம், சர்வதேச அபிவிருத்தி கெடுபிடிகளிலிருந்து விடுபட்டதுடன், தாய்லாந்தை தமது நாட்டுக்கேயுரிய பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரங்களுக்கமைய நிர்வகித்துச்செல்ல முடிவதாக அவர் அப்பெறுமதிமிக்க விடயத்தை விவரித்திருந்தார். இதற்கு முன்னரும், மலேசிய நாட்டின் பிரதமராயிருந்த டாக்டர் மஹதீர் முகமதுவும் இவ்விதமான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். மேற்கூறிய தலைவர்களினது புத்திசாலித்தனமான நடவடிக்கைகளை எம்மால் மேற்கொள்ள இயலுமா என்பது பிரச்சினைக்குரிய விடயமே. ஆனால், மேற்கூறிய நாடுகள் இவ்விதம் அபிவிருத்தியடைந்தமைக்கான காரணம் உலக உதவி நிறுவனங்களின் பிடியிலிருந்து விடுபட்டமையேயாகும்.

### வீயெஸ்ரீ

உலக உதவி நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறிய அளவிலேயே ஏழை மக்களைச் சென்றடைகின்றன. வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் அவர்களால் இவ்விரிவான பொருளாதாரப் போரில் வெற்றிகாண முடியாது. அவர்கள் பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடையும் வரையில் அரசு அவர்களுக்கு உதவிகள் வழங்கியேயாக வேண்டும். இது தொடர்பாக எஸ்.பி.திஸாநாயகா மற்றும் ரவி கருணாநாயகா போன்றோர் கடைப்பிடிக்கும் அணுகு முறைகளில அர்த்தமுள்ளதா என அரசின் கொள்கை வகுப்பாளர்கள் சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகும். எல்லாவற்றுக்கும் 'இல்லை' எனவோ, அல்லது "முடியாது" என ஆவணங்களின் அடிப்படையில் பதில் சொல்லவோ ஆரம்பித்தால், இடம் பெறப்போவது பெரும் சிக்கலேயன்றி வேறெதுவுமில்லை.

## பிற்போடப்பட்டுள்ளது

லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினரால் நேற்று (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை நடத்தப் படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத சில காரணங்களால் எதிர்வரும் 30.09.2003 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

ஆனைக்கோட்டை. (22107) (25-13-14) -கழகத்தினர்.



**SHAMROCK J/EACHCHAMODDAI**

**A/L DAY**

கலை, வர்த்தகம்

COM - Mr.பசீல்

ACC - Mr.தவா.

**O/L PAPE**

Sc. Mr.டார்வின்

Ma - Mr.அருள்நேசன்

(22105) (25-13-14)


# வேலணை கிராமிய ஆஸ்பத்திரியில் அதிகாரிகள் குழு திடீர் சோதனை!

சண்டிலிப்பாய், செப்.1

யாழ். மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வமாக வருகைதந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திடீர் பரிசோதனைக் குழு வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சோதனை மேற்கொண்டது. அப்போது அங்கு வைத்திய சாலை பொறுப்பதிகாரி கடமைக்கு வராமல் இருந்ததையும் - சிகிச்சை பெறுவதற்காக 30இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் காத்து நின்றதையும் - நேரடியாக அவதானித்துள்ளது.

இதேவேளை, அங்கு சிகிச்சை பெறுவதற்குக் காத்திருந்த நோயாளி ஒருவர் வயிற்றோட்டத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த பரிசோதனைக் குழுவின் தலைவரும், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளருமான டாக்டர் ஏ.எம்.எம். றியாஸ் அந்த நோயாளிக்குச் சிகிச்சையளித்துள்ளார்.

இவ் வைத்தியசாலையில் ஊசி மருந்து ஏற்றுவதற்கு மேலதிகமாகப் பணம் வசூலிக்கப்படுவதாகக் கூறப்படுவது குறித்தும் சிகிச்சை பெறுவதற்கு வந்திருந்த நோயாளர்களிடம் இக்குழுவினர் விசாரித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-135)

## சுதேச மருத்துவருக்கு ரூ.2000 அபராதம்

வைத்தியநிலையத்தில் காலாவதியான மருந்துகளை வைத்தியம் செய்வதற்கு வைத்திருந்ததாகவும், ஆங்கில மருந்துகளை பயன்படுத்துவதற்கான முன் அனுமதியைப் பெறாது அவற்றை வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வலி.மேற்கு பகுதியைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகரினால் வலிகாமம் மேற்கு பகுதியைச் சேர்ந்த மேற்படி வைத்தியர் மீது குற்றம் சாட்டி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், மேற்படி 2000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். (ஒ-135)







# இலவச மாணவர் சீருடை விநியோகம் இம்முறையாவது சீராக இடம்பெறுமா?

2003ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட இலவச சீருடை வழங்கல் நடைமுறை 2004 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டில் சீருடை விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள், கஷ்டங்கள் காரணமாக சீருடை விநியோகத்தை மாற்றியமைத்து 2004 ஆம் ஆண்டில் சீரான விநியோகத்தை ஏற்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின்கீழ் கிராம சேவை அலுவலர்கள் முக்கிய இடத்தைப் பெறுவதால் இம்முறை சீருடைகளைப் பெறுவதில் பொதுமக்கள் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள மாட்டார்கள் எனக் கருதப்படுகின்றது.

பிரதேச செயலர்களிடம் கிராம சேவை அலுவலர்களால் கையளிக்கப்படும் பட்டியல் அளவுக்கமைய கல்வி அமைச்சினால் சீருடைகள் வழங்கப்பட இருப்பதனால், கடந்த காலங்களில் ஏற்பட்டதாகக் கருதப்படும் சீருடை தொடர்பான துஷ்பிரயோகங்கள், கையாடல்கள் எதிர்காலத்தில் ஏற்படமாட்டாது எனவும் -

இதனால், சீருடைகளை மிகுதியாக்குவதுடன், அவற்றுக்காகச் செலவிடப்படும் பணத்தினையும் குறைத்துக்கொள்ளமுடியும் என அரசு எதிர்பார்க்கின்றது.

**சீருடை விநியோக ஆரம்பம்**

அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவச சீருடை வழங்கும் திட்டம் 1992 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டமானது கல்வி அமைச்சினால் தன்கீழுள்ள மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஊடாக செயற்படுத்தப்பட்டு வந்தது.

பாடசாலை அதிபர்கள் ஒவ்வொருவரும் வழங்கும் மாணவர்கள் தொகை பற்றிய விவரங்களின் அடிப்படையில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விவரத்தை திரட்டி கல்வி அமைச்சுக்கு அனுப்பி, தேவையான சீருடைகளைப் பெற்று அதிபர்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்கிவந்தனர்.

இந்த நடைமுறைகளில் பல குறைபாடுகள் இருப்பதாகக் கருதிய கல்வி அமைச்சுச் சீருடை விநியோகத்தை மாற்றியமைக்க திட்டமிட்டது.

**இலவச சீருடை**

**விநியோக குறைபாடுகள்**

சில பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலை மாணவர்களின் தொகை வீழ்ச்சியடையாது இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காக பாடசாலைகளுக்கு வருகைதராத - ஆனால், பாடசாலைகளில் இருந்து விடுகை சான்றிதழ்களைப் பெறாத - மாணவர்களுக்கும் சேர்த்து சீருடைகளுக்கு விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்பட்டது.

பெறப்பட்ட இச்சீருடைகள் உரிய மாணவர்களுக்கு விநியோகிக்கப்படாது பல்வேறு தேவைகளுக்கு சில அதிபர்களால் பயன்படுத்தப்பட்டு துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வசதியுள்ள மாணவர்கள் இலவச சீருடைகளைப் பெற்றுக்கொள்ள முன்வராதிருந்தமையும், இவ்வாறான சீருடைகள் கல்வி அமைச்சுக்கு திருப்பி வழங்கப்படாதிருந்தமையும் - குறிப்பிட்ட அமைச்சு அவதானித்துக்கொண்டது.

மேற்படி நடவடிக்கைகள் காரணமாக கல்வி அமைச்சுக்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது. இவற்றின் அடிப்படையிலேயே இலவச சீருடை விநியோகத்தில் புதிய நடைமுறையை அமுல்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்ததாகவும் தெரிய வருகின்றது.

**சீருடை விநியோக மாற்றம்**

மேற்படி குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவித்த கல்வி அமைச்சு, 2003 ஆம் ஆண்டில் சீருடை விநியோகத்தில் மாற்றத்தை கொண்டுவந்தது. அதன்படி 2003 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை விநியோகம் மாவட்ட செயலர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

2003 ஆம் ஆண்டு சீருடை விநியோகத்துக்கான விண்ணப்பங்கள் கிராமசேவை அலுவலர்கள் மூலம் செயற்படுத்தப்படாமல் நேரடியாகப் பாடசாலை அதிபர்களால் பிரதேச செயலகங்களில் கையளிக்கப்பட்டன.

இதன் காரணமாக பிரதேச செயலர்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. தமக்கு கிடைத்த விண்ணப்பங்கள் மூலம் உரிய விண்ணப்பதாரியின் சரியான கிராம சேவை அலுவலர் பிரிவைக் கண்டுபிடிப்பதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அத்துடன், இடம்பெயர்ந்தவர்கள் தமது கிராம அலுவலர் பிரிவினை சரியாகக் குறிப்பிடத்தவறியமையால் அவர்களால் அவ்வாண்டுக்கான சீருடைகளை பெற்றுக்கொள்ள முடியாமலும் போய்விட்டது.

**கூட்டுறவுச் சங்கம் மூலம்**

**சீருடை விநியோகம்**

பிரதேச செயலகங்களால் விநியோகிக்கப்பட்ட 2003ஆம் ஆண்டுக்கான சீருடைகள் அந்தந்தப் பகுதி ப.நோ.கூ.சங்கங்களில் வைத்து வழங்கப்பட்டன. ப.நோ.கூ. சங்கங்கள் சில நேரடியாகப் பாடசாலைகளுக்குச் சென்று சீருடைப் பொதிகளை வழங்கிய சந்தர்ப்பமும் உண்டு. வேறு சில ப.நோ.கூ. சங்கங்கள் தமது கிளைகளில் வைத்து இவற்றை விநியோகித்தன. எனினும், சில முக்கிய கிளைகளில் மாத்திரம் இவ்விநியோகத்தை மேற்கொண்டதனால் அநேகமான பெற்றோர்கள் சீருடைகளைப் பெற்றுக் கொள்வதில் பல கஷ்டங்களுக்குள்ளாகினர்.

**விநியோக நடைமுறையில் மாற்றம்**

2003 ஆம் ஆண்டு சீருடை விநியோகத்தில் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு 2004 ஆம் ஆண்டுக்கான சீருடைகளைச் சீரான முறையில் விநியோகிக்கப் புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

2004 ஆம் ஆண்டில் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் சீருடைகள் விநியோகிக்கப்படமாட்டா. அதற்குப் பதிலாகத் தத்தம் பகுதிக் கிராம அலுவலர்கள்மூலம் விநியோகிக்கப்படுவதால் சீருடைகளைப் பெறுவதில் பெற்றோருக்கு அதிக சிரமம் ஏற்படாதெனக் கல்வி அமைச்சு நம்புகின்றது.

2004 ஆம் ஆண்டுக்கான சீருடை விநியோகத்தை மாவட்ட செயலர், பிரதேச செயலர், கிராம அலுவலர்கள் மூலம் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சீருடைக்கு விண்ணப்பிக்கும் முறை**

பாடசாலை சீருடைத் துணி தேவைப்படும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே 2004 ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வழங்கப்படும்.

**வி.பி.சர்மா**
*வலிகாமம் தெற்கு செய்தியாளர்*

எனவே, பெற்றோர்கள் உரிய காலத்தில் விண்ணப்பங்களை நிரப்பி, வகுப்பாசிரியர்கள், அதிபர்களின் சிபார்சினைப் பெற்று, தாம் வசிக்கும் பிரிவின் கிராமசேவை அலுவலரிடம் அவற்றை ஒப்படைக்கவேண்டும்.

கிராமசேவை அலுவலர்கள் நேரடியாக சம்பந்தப்படுவதாலும், விண்ணப்பத்தின் "அ,ஆ" பகுதிகள் சரியாக நிரப்பப்பட்டுள்ளனவா? என்பதை பரிசீலனைசெய்து அவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்வதனாலும் 2004 ஆம் ஆண்டு சீருடை வழங்கலை சரியான முறையில் செயற்படுத்த முடியும் எனக் கருதப்படுகிறது.

அத்துடன், விண்ணப்பத்தின் 'இ' பகுதியைப் பூரணப்படுத்தி கிராம சேவை அலுவலர்கள் பெற்றோர்களுக்கு வழங்குவதால் இவ்விநியோகத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

**சீருடை வகைகள்**

உரிய தர மாணவர்கள் உரிய துணிவகைகள் மற்றும் குறியீட்டு எண் என்பவற்றை வெவ்வேறாகப் பிரித்து மூன்று வகைகளுக்குள் உள்ளடக்கியுள்ளனர்.

அவற்றின் விவரம் பின்வருமாறு:-

- கனிஷ்ட மாணவர்கள் - தரம் 1 முதல் தரம் 5 வரை.
- இடைநிலை மாணவர்கள் - தரம் 6 முதல் தரம் 9 வரை.
- சிரேஷ்ட மாணவர்கள் - தரம் 10 முதல் தரம் 13 வரை.

**பெற்றோர்கள் கவனத்துக்கு!**

உங்கள் பிள்ளைகளுக்கான சீருடை விண்ணப்பங்களைக் கிராம சேவையாளர்களிடம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குமுன் ஒப்படைக்கவேண்டும். எனவே, சகல பெற்றோர்களும் உரிய விண்ணப்பங்களை ஒப்படைத்து சீருடைகளைப் பெற்றுக்கொள்வதில் அக்கறை கொள்ளவேண்டும். ✦

| மாணவர் வகை | துணிவகையும் நிறமும் | குறியீடு |
|---|---|---|
| கனிஷ்ட ஆண் மாணவர்கள் | சட்டைத்துணி - வெள்ளை | JB-(S) |
| மத்திய ஆண் மாணவர்கள் | சட்டைத்துணி - வெள்ளை | IB (S) |
| சிரேஷ்ட ஆண் மாணவர்கள் | சட்டைத்துணி - வெள்ளை | SB (S) |
| கனிஷ்ட ஆண் மாணவர்கள் | கட்டைக் காற்சட்டை துணி - நீலம் | JB-T-S (B) |
| கனிஷ்ட ஆண் மாணவர்கள் | கட்டைக் காற்சட்டை துணி - வெள்ளை | JB-T-S(W) |
| மத்திய ஆண் மாணவர்கள் | கட்டைக் காற்சட்டை துணி - நீலம் | IB-TS (B) |
| மத்திய ஆண் மாணவர்கள் | கட்டைக் காற்சட்டை துணி - வெள்ளை | IB-TS (W) |
| சிரேஷ்ட ஆண் மாணவர்கள் | நீண்ட காற்சட்டை துணி - வெள்ளை | SB-TL (W) |
| கனிஷ்ட மகளிர்கள் | கவுண்துணி வெள்ளை | JG - (F) |
| மத்திய மகளிர்கள் | கவுண்துணி வெள்ளை | IG (F) |
| சிரேஷ்ட மகளிர்கள் | கவுண்துணி வெள்ளை | SG (F) |

# தேநீர்ச் சாலை உரிமையாளருக்கு சுத்தம் பேண தவறியமைக்காக அபராதம்

சண்டிலிப்பாய்,செப்.1

தமது தேநீர்ச்சாலையில் தேநீர் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பாத்திரங்களையும் உபகரணங்களையும் சுத்தமாக வைத்திருக்கத் தவறிய உரிமையாளர் ஒருவருக்கு நீதிவான் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த தேநீர்க் கடை உரிமையாளர் ஒருவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகரினால் கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டிலேயே நீதிவான் மேற்படி அபராதத்தை விதித்தார்.

தேநீர் தயாரிக்கும் பாத்திரங்களையும், உபகரணங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறும், தவறும் பட்சத்தில் இனிமேல் கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதிவான் தேநீர்க் கடை உரிமையாளரை எச்சரித்தார்.

(ம-135)

## பல்கலைக்கழக பொருளியல் மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்ப்பாண பல்கலைக்கழக மூன்றாம் வருட பொருளியல்துறை மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மூன்றாம் வருட பொருளியல்துறை மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொருளியல் துறை யின் மூன்றாம் வருடப் பிரதிநிதி கேட்டுள்ளார். (எ-6)

## கல்விச்சாலைக் காட்சிகள்



இருபாலை தெற்கு, புதிய செம்மணி வீதி, கலைவாணி முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வோதயத்தின் கோப்பாய் பிரிவு வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி க.இராஜேஸ்வரி சர்வோதயக் கொடியினை ஏற்றிவைப்பதைப் படத்தில் காணலாம். முன்பள்ளி ஆசிரியை திருமதி ஜெ.சசிக்குமாரும் முன்பள்ளி சிறார்களும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-180)



உடுவில் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி மாணவரின் வருடாந்த விளையாட்டு விழா உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இடம்பெற்ற அணிவகுப்பில் மாணவர்கள் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். முன்பள்ளி ஆசிரியைகளான செல்வி சு.ஜீவஜோதி, செல்வி கு.வசந்தி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-152)



ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் நடத்தப்பட்ட முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தீவக கல்வி வலய முன்பள்ளி உதவி கல்விப் பணிப்பாளர் மு.தவராசா உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் கோ.சற்குணபாலன், பிரதேச செயலாளர் கு.கணேசலிங்கம், இலங்கை வங்கி முகாமையாளர் இ.விஜயரட்ணம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-16)



புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் சுந்தரர் குருபூசை மற்றும் சேரமான் நாயனார் குருபூசை என்பன அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு தெய்வீகப் பேருரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் வ.ஆறுமுகமும் படத்தில் காணப்படுகின்றார். (எ-72)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.1

மாவீரர் நினைவாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வதிரி பொமேர்ஸ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணிக்கு வல்வை ஆதிசக்தி வி.க. எதிர் செண்மைக்கல் வி.க.

★ மாலை 5 மணி ஏ.எல்.வி.க. எதிர் இளவாலை யங் ஹென்றிஸ் வி.க.

★ ★ ★

வலி.வடக்கு,செப்.1

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு:-

**15 வயதுப்பிரிவு**

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

**16 வயதுப்பிரிவு**

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி எதிர் இணுவில் இந்துக கல்லூரி .

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

★ கந்தரோடை தமிழ கந்தையா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம். (-5,86)


JKI

# John Keells INSTITUTE

**Globally recognized**

**JOHN KEELLS**

**BTEC HIGHER NATIONAL DIPLOMA IN COMPUTING**

**Leading to a B.Sc. (Hons) degree .....**

Now offered in Jaffna....

- Awarded by Edexcel international UK
- Equivalent to the Ist two years of an International B.Sc. (Hons) degree.
- Final year entry in to University degree programmes around the world.
- Individual attention (only 20 students per batch)
- International course curriculum
- Expert multinational faculty.
- Learning model
- Lending, reference Library and Internet facilities
- Over 1000hrs of guided learning.
- Excellent infrastructure (A/C lecture halls, tabs etc)
- Unlimited practical hrs.
- Focus on Job oriented soft skills.
- Industrial placements.

Only 40 students will have the opportunity this year.

**1[st] Batch**

**Commences on 12th September 2003**

For more information,
Call (now on 222 2831 or
visit us at John Keells Institute - Jaffna Centre
100, Clock Tower Road, Jaffna.

(C/29907) (32-12-17)


# மரண அறிவித்தல்

## முருகேசபிள்ளை கதிர்காமசேகரம் (M.K.சேகரம்)

(இளைப்பாறிய அதிபர், அருணோதயக் கல்லூரி)

அளவெட்டி மேற்கைச்சேர்ந்த முருகேசபிள்ளை கதிர்காமசேகரம் அவர்கள் 30.8.2003 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் முருகேசபிள்ளை பாக்கியலக்சுமியின்(மலேசியா) கனிஷ்ட புத்திரனும், சோமசுந்தரம் நாகம்மாவின் மருமகனும், திலகவதியின் (இளைப்பாறிய ஆசிரியை, அருணோதயக் கல்லூரி), அன்புக் கணவரும், ஷாந்தி(ஆசிரியை, அருணோதயக் கல்லூரி), Dr.இரவீந்திரன்(கனடா), Dr.உருத்திரன்(யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாநிதி(Dr) அமிர்தலிங்கம்(விரிவுரையாளர்-**N.I.E**-உபஅதிபர்-அத்தியார் இந்துக் கல்லூரி), Dr.குகாநந்தி(கனடா), இந்திராணி(ஆசிரியை, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மிதுனன் (கனடா), கஜானி, கேஷாயினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கணேசரத்தினம்(முன்னாள் ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி), அருணாசலம்(இளைப்பாறிய **A.G.A.**), புனிதவதி திருஞானசம்பந்தமூர்த்தி (ஓய்வுபெற்ற துணைஅதிபர்-சென்தோமஸ் கல்லூரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமோதர இல்லம்,*
*"இணுவில் கிழக்கு"*
*இணுவில்.*

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

(22109)(12-17)


மீண்டும் யாழ். நகரில்! | புதுப் பொலிவுடன் நியூலலிதா!

பழைய நிர்வாகத்தில்

# மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

**நிகழும் சுபமங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் இன்று (01.09.2003) திங்கட்கிழமை பிற்பகல் 12.05 மணிமுதல் 1.35 மணிவரையுள்ள சுபவேளையில்,**

எமது ஸ்தாபனமாகிய

# நியூ லலிதா நகைமாடம்

என்னும் ஸ்தாபனம் எம்மால் ஆரம்பித்து திறந்துவைக்கப்படும். அத்தருணம் எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர், அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கொழும்பில்:**
நியூ லலிதா ஜுவல்லரி,
165,செட்டியார் தெரு,
கொழும்பு- 11.

உரிமையாளர்,
நியூ லலிதா நகைமாடம்,
191 H.K., கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

☞ *முக்கிய குறிப்பு:* யாழ். நகரில் நியூ லலிதாவுக்கு வேறு கிளைகள் கிடையாது.

(22144)(18-12-17)


## திருமதி.ஜெயராணி வரதராஜா

"பொத்தா"

ஆசிரியை கீரிமலை நகுலேஸ்வரா கல்லூரி



பொத்தா நீ போனதென்ன
போதுமென்றா இவ்வுலகு...
ஆறவழி தெரியவில்லை
மாதமொன்றும் போனதம்மா

*பிறந்தாள் 01.07.1965* *பறந்தாள் 01.08.2003*

*நன்றி பல கூறுகின்றோம்*

*யாழ் போதனா வைத்தியசாலை 22ஆம் 3ஆம் வாட் கொழும்பு வைத்தியசாலை நரம்பியல் பிரிவு வைத்திய அதிகாரிகள் அவர்களோடிணைந்து உதவிய தாதியர் ஊழியர்கள், அம்புலன்ஸ் சாரதிக்கும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உதவியளித்த வைத்தியர்கள் நண்பர்கள் உறவினர்களுக்கும் மரணச்சடங்கில் பங்குபற்றி எமது துயரிற் பங்குகொண்டு, எமது குலவிளக்கின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்த கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரிய, மாணவ சமூகத்திற்கும் நண்பர்கள், அயலவர்கள். உறவினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.*

*கணவர் - இ.வரதராஜா*

*கந்தையா குடும்பத்தினர்*
*(காங்கேசன்துறை)*

*இரத்தினம் குடும்பத்தினர்*
*(தெல்லிப்பழை)*

*150,ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்.*
*யாழ்ப்பாணம்.*

*துர்க்கா மில் அருகாமை*
*பொன்னாலை காரைநகர் வீதி.*
*மானிப்பாய்*


மங்களகரமான

# நேசம் அழகு நகை திறப்புவிழா அழைப்பு

***அன்புடையீர்!***

இற்றைநாள் வரை பிரதான வீதி, சங்கானையில் இயங்கி வரும் எமது நிறுவனம் இப்போது மீண்டும் பிரதான வீதி,சாவகச்சேரியில் முன்பு இயங்கிய அதே முகவரியில்

# நேசம் அழகு நகை

எனும் பெயரில் இன்று ஆவணித் திங்கள் 15ஆம் நாள் (01.09.2003) திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரையில் வரும் சுபவேளையில் (நிறுவனம் மீண்டும் இயங்கத் தொடங்குவதற்காக) ஆரம்பிக்கின்றோம் என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இந்நிகழ்வுக்கு அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிளை நிறுவனம்,
பிரதான வீதி,
சங்கானை.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. இராசரத்தினப் பத்தர்
ஜெயபாலன்.

(22103) (26-12-17)

## வடக்கு-கிழக்கு மாகாணத்தின்

# 500 ஆசிரியர் நியமனங்களை துரிதமாக வழங்கவேண்டும்

## கல்விச் செயலாளரிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

காரைதீவு,செப்.1

"வடக்கு-கிழக்கில் இதுவரை வழங்கப்படாதிருக்கின்ற 500ஆசிரியர் நியமனங்களை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்."

-இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் இரா. தியாகலிங்கத்திடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் தூதுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி சந்திப்பு கடந்த திங்கட்கிழமை திருமலை அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையிலான குழுவினர் ஆசிரியர் நியமனம் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

1000 பட்டதாரி ஆசிரியர் நியமனத்தின்போது பதவியேற்காத பட்டதாரிகளின் வெற்றிடங்களை பட்டியலில் அடுத்த படியாயுள்ள பட்டதாரிகளைக் கொண்டு நிரப்புதல், தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் இதுவரை நியமனம் வழங்கப்படாதுள்ள 91பேரது நியமனங்களை வழங்குதல் அத்துடன் பதவியேற்காதுள்ள தொண்டர் ஆசிரியரின் இடத்திற்கு புதியவர்களைச் சேர்த்தல்.

தகுதிகாண் ஆசிரியர் நியமனத்தின்போது பதவியேற்காதவர்களின் இடத்திற்கு புதியவர்களை சேர்த்தல், திறைசேரி கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்ட நியமனம் என்பதால் மாகாணச் செயலர் நியமனம் வழங்கலாம்.

மாகாண கல்விச் செயலாளரின் அதிகாரத்திற்குட்பட்ட விடயம் என்பதால் மேற்படி விடுபட்ட 500 ஆசிரியர் நியமனங்களையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(ம)

### சட்டக் கல்லூரி பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நேற்றுடன் நிறைவு

யாழ்ப்பாணம்,செப்.1

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வந்த கருத்தரங்கு நேற்று பூர்த்தியடைந்தது.

யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் சட்டக்கல்லூரி மாணவர் இந்து மகாசபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்கள் நடத்தப்பட்டு நேற்று பூர்த்தியாகியது.

சட்டத்துறை விரிவுரையாளர்கள் விரிவுரைகளை நிகழ்த்திய இக்கருத்தரங்கில் நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

கடந்த 10 வருடங்களின் பின் சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி எஸ்.பிறேசிலா
கிராம சேவையாளர்
J/131,சாவல் கட்டு.

எமது கிராம விளையாட்டுப் போட்டியினை முன்னிட்டு, தன்னலமற்றதும் உண்மையானதுமான அவரது சேவையைப் பாராட்டியும் அச்சேவை தொடர்ந்தும் எமக்குக் கிடைப்பதற்கும் அவரை நீடுழிகாலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

சாவல்கட்டு மக்கள். (C/22116) (14) மகாத்மா சனசமூக நிலையம், மகாத்மா விளையாட்டுக் கழகம்.

செகராசசேகரப்பிள்ளையார் துணை

YOGANATHAN GRAPHICS & OFFSET PRINTERS

## மங்களகரமான திறப்புவிழா

சகலவிதமான கணனி மூலமான அச்சுவேலைகளையும் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் சிறப்பாகச் செய்து பெற்றிட இணுவில் மத்திய கல்லூரிக்கு (சிரேஸ்ட பிரிவு) முன்பாக 01.09.2003 திங்கட்கிழமை காலை 10.48 - 12.00 மணி வரையுள்ள சுபவேளையில் எமது சேவையை ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
யோ.சுதந்திரனும் சகோதரர்களும்

YOGANATHAN GRAPHICS & OFFSET PRINTERS
K.K.S Road, Inuvil East.



## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம்–2003

முருகன் அடியார்களே!

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று (01.09.2003) திங்கட்கிழமை பகல் 11.00 மணிக்கு கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது.

### விசேட உற்சவங்கள்

| | |
|---|---|
| கொடியேற்றம் | –01.09.2003 திங்கட்கிழமை பகல் 11.00 மணி |
| தண்டாயுத பாணி உற்சவம் | –07.09.2003 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி |
| சப்பரத்திருவிழா | –08.09.2003 திங்கட்கிழமை மாலை 7.00 மணி |
| தேர்த்திருவிழா | –09.09.2003 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி |
| தீர்த்தோற்சவம் | –10.09.2003 புதன்கிழமை காலை 9.30 மணி |
| பூங்காவனம் | –11.09.2003 வியாழக்கிழமை மாலை 6.30 மணி |
| அலங்கார உற்சவம் | –12.09.2003 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி |

மஹோற்சவ குரு, பிரதிஷ்டா பிரதம குரு:
ஈசான சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ இரங்க - வரதராஜக்குருக்கள்.

அடியார்கள் வருக! ஆறுமுகன் அருள் பெறுக!!

வே.நடராசா
பொருளர் (22111) (14)
ஆலயத் தொண்டில் நிர்வாக சபையினரும் இளம் தொண்டர்களும்.

## நிதர்ஷன் சிறுதிரை
மயிலங்காடு.

10.30, 2.30, 6.30 காட்சிகள்
மனோஜ் நடித்த
பாரதிராஜாவின்
ஈரநிலம்
T.P. 0777-178155
(22117) (32)

## தேவை

கொடிகாமம் மத்தியில் இயங்குகின்ற தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றுக்கு பணியாளர் தேவை. G.C.E. O/L, A/L தராதரமுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு சனி, ஞாயிறு காலை 7.30-11.30 மணிக்குள் நேரில்வரவும்.

நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை,
சாவகச்சேரி. (22101) (14)

## லஷ்சுமி சினிமா
இணுவில்

முரளி, தேவயானி, அப்பாஸ் நடிப்பில்
காதலுடன்
(சீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).

## நாகம்ஸ் சுன்னாகம்

மனோஜ், நந்திதா, வடிவேலு, சுபாஸ் நடித்த பாரதிராஜாவின் புதிய வெளியீடு
ஈரநிலவு
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

## நிரஞ்சனாஸ்

சரத்குமார், சிம்ரன் நடிக்க
அரசு
தினசரி காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
THE PEACE KEEPER
தினசரி 7.45 இற்கு.

## ராஜா யாழ்ப்பாணம்

மாதவன், சிம்ரன் நடிக்க
பார்த்தாலே பரவசம்
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)



புதிய இடத்தில்
சலுகை விலையில்

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நீடித்த பாவனைக்குப் பெயர் பெற்ற Compaq, Dell கணனிகள் உத்தரவாதத்துடன், மலிவு விலையில் (ரூ 15,000.00 லிருந்து) விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. (இச்சலுகை விலை எதிர்வரும் 19ம் திகதிவரை மட்டுமே).

STP Your Partner in IT Solution
73, Palaly Road Kantharmadam, Jaffna T.P.2222674

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவரான
### அப்பாத்துரை கருணாகரஐயா
அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

உரும்பிராய். சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபையினர். (22115) (14)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபர்
திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்களின் அருமை அண்ணா
### அப்பாத்துரை கருணாகரஐயா
அவர்களது
மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- பழைய மாணவர் சங்கம்.
உரும்பிராய் இந்துக்கல்லூரி. (22113) (14)

## மரண அறிவித்தல்கள்

### அப்பாத்துரை கருணாகரஐயா

உரும்பிராய் மேற்கைச்சேர்ந்த அப்பாத்துரை கருணாகரஐயா அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை - இராசம்மா தம்பதியரின் அருமைப் புதல்வரும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகந்தி, சியாமளா, சுதாகரன், சிவாகரன், சசிகரன், சர்மிளா, நிரோஜன், நிசாந்தன ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரநாதன் (அதிபர், யா/உரும்பிராய இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புத் தமையனாரும் பா. உதயசங்கரின் மாமனாரும் இ.கணேசஐயாவின் அன்பு மருமகனும் வைஷ்ணவி, ரேவதி, பானுஜன் ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-09-2003) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் உரும்பிராயிலுள்ள அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

"கருணைவாசா"
உரும்பிராய்மேற்கு. (22112) (14)
தகவல்: மனைவி, மக்கள், சகோதரர், மருமகன்.

### கதிரவேலன் கந்தையா

(ஓய்வுபெற்ற கைதடி அரச முதியோர் இல்ல ஊழியர்)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலன் கந்தையா 31.08.2003 (ஞாயிற்றுக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலன் - பார்வதம் ஆகியோரின் அன்பு மகனும் சின்னட்டியின் அன்புக் கணவரும் நாகன் என்பவரின் அன்புச் சகோதரனும் நவரட்ணம் (ஆஸ்திரேலியா), தவமலர், சிவபாக்கியம் ஞானாமபாள், புவனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகையா, கனகலிங்கம், சண்முகநாதன் (C-T-B), ஆனந்தராசா (சுவிஸ்), அகிலாண்டேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜன், தர்சா (ஆஸ்திரேலியா), கருணாகரன் (லண்டன்), பிரதீபன் (கல்வித் திணைக்களம், சாவகச்சேரி), காயத்திரி, கௌசிகா, கஜேந்திரன், கௌதமி, சுஜிதரன், சஞ்சீவன், சிந்துஜன், துவாரகா, பகீரதன், துஸ்ஜந்தி, கோபிகிருஷ்ணா, யாழினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:-
கைதடி தெற்கு
(வலந்தனை வீதி), கைதடி. (C/29912) (14)
தகவல்: க. சின்னட்டி (மனைவி),

### பொன்னையா நடராசா

(நில அளவைத் திணைக்கள ஓய்வுபெற்ற ஊழியர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், வியாபாரிமூலை, 'வள்ளி வளவை' வசிப்பிடமாகவும் கொண்ட பொ.நடராசா கடந்த 30.08.2003ஆம் திகதி கா[illegible]னார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் நாகேந்திரராசா, நவரத்தினராசா, ரவிதாஸ் (சுவீடன்), ரஜனிதேவி (கனடா), நந்தகுமார் நல்லகுமார் (லண்டன்), சாந்தமலர் ஆகியோரின் அருமைத் தந்தையும் விஜயராணி, பராசக்தி, சர்வலோகன் (கனடா), தர்சினி (சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, பாக்கியம் மற்றுமுள்ள செல்லம்மாவின் அன்புச் சகோதரரும் கமல்ராஜ், சுமதி, நிமல்ராஜ், மதன்ராஜ், கீர்த்திகா, சுவேதி, விதுர்ஷன் (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும் மகேஸ்வரி, சௌந்தரம் ஆகியோரின் அருமை மைத்துனரும் சிறி, ஜமுனா (ஜேர்மனி), சுவித்ரா (கனடா) ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும் சின்னத்தம்பியின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (31-08-2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழவத்தை,
வியாபாரி மூலை. (C/29911) (14)
தகவல்: குடும்பத்தினர்.

# தெற்காசியாவின் பிரதான சுற்றுலா மையமாக காலிநகரை மாற்றவுள்ளதாக பிரதமர் அறிவிப்பு

கொழும்பு,செப்.1

காலிநகரை தெற்காசியாவின் பிரதான சுற்றுலா மையமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை தமது அரசு மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

காலி கோட்டைக்கு நேற்று விஜயம் செய்த பிரதமர், அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது- காலி கோட்டை எமது பாரம்பரிய சொத்து [illegible]. சுற்றுலாத் துறையினது [illegible]மான பகுதியும் கூட. இந்த இரண்டு முக்கியத்துவங்களையும் இணைத்து காலி கோட்டையின் வரலாற்றையும் பாதுகாத்து இந்தப் பிரதேசத்தை பாரிய சுற்றுலா மையமாக மாற்றத்திட்டமிட்டுள்ளோம். இங்குள்ள அரச கட்டடங்களை அகற்றி அவ்வறைச் சுற்றுலா விடுதிகளாக மாற்றவுள்ளோம். அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளுக்குள் 10 லட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர எண்ணியுள்ளோம். இதன் மூலம் ஒரு கோடி டொலர் வருமானத்தை ஈட்டலாம். இதற்கான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும்தெரிவித்தார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் இன்னும் உயிர்வாழும் ஒரே ஒரு அம்சம் வடக்கு - கிழக்கு இணைப்புதான். அதாவது, வடக்கு - கிழக்கு ஒரே அலகு எனும் விடயம் மட்டுமே இன்று எஞ்சியிருக்கிறது. அந்த அலகு இந்திய அரசியல் தலைமைகளால் அங்கீகரிக்கப்பட்டமையால் தான் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் இணைந்த வடக்கு -கிழக்கு மாகாணம் உருவாக்கப்பட்டது.

இதனை இப்போது இரண்டாகப் பிரிக்க முயல்வது இந்தியாவிற்கு ஏற்படும் ஒரு தோல்வியாகும். அதிலும் சிறுமை[illegible]. இந்தியாவை அமைதிகாக்க கோரியது அரசியல் வேடிக்கையாகும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தை தமிழ்க் கட்சிகளோ அல்லது முஸ்லிம் அமைச்சர் ஒருவர் தவிர முஸ்லிம் கட்சிகளோ பிரிக்கக் கோரவில்லை. ஜனாதிபதி தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே இந்தப் பிரிப்பு விடயத்தை முன்வைத்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம், நோர்வே மத்தியஸ்தம் என்பவற்றை ஜனாதிபதியே ஏற்படுத்தினார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியப் பணிக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## திரைப்படக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கையாளர்கள் திரையரங்கு வாயிலில் கூடியிருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள்.

அப்போது இரவுக் காட்சி இடை நிறுத்தப்பட்டதாக திரையரங்கு நிர்வாகிகள் திடீர் அறிவிப்பு ஒன்றை விடுத்தனர். இதனால், கோபமடைந்த இளைஞர்கள் திரையரங்கை நோக்கி கல்வீச்சில் ஈடுபட்டதுடன் கத்திக் கூச்சலிட்டவாறு அட்டகாசம் புரிந்தனர்.

கல்வீச்சினால் திரையரங்கின் அருகில் இருந்த கட்டடத்தின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின. சில கடைகளின் பெயர்ப்பலகைகளுக்கும் சேதங்கள் ஏற்பட்டன.

நிலைமை எல்லை மீறியதால் திரையரங்கு நிர்வாகிகள் பொலிஸாருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அறிவித்தனர். இரு தரப்பினரும் உடனடியாக அங்கு விரைந்தனர்.

கூடி நின்று அட்டகாசம் புரிந்த இளைஞர்களை பொலிஸார் விரட்டினர். அதனை அடுத்து சம்பவ இடத்தில் கைவிடப்பட்டிருந்த இரு சைக்கிள்களைப் பொலிஸார் மீட்டு தம்முடன் எடுத்துச் சென்றனர். (ம-4)

## திருநாவுக்கரசுவின் 70 ஆவது பிறந்த தினம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் மு.திருநாவுக்கரசுவின் 70 ஆவது பிறந்ததின நிகழ்வுகள் இன்று கொழும்பில் உள்ள கூட்டணி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

விசேட அஞ்சலி நிகழ்வுகள், அன்னதான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. (ம-3)

## மடு வீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரிக்வே ரெலிவ்சன் கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவைச் சந்தித்து இவ்வீதியைப் போக்குவரத்துக்கு மீண்டும் திறந்துவிடுவது குறித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதற்கிடையே, இவ்வீதி குறித்து எழுந்திருக்கும் பிரச்சினையை ஆராய்வதற்காக வன்னி பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையே இன்று மன்னாரில் சந்திப்பொன்று நடைபெற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்திருக்கிறது.

கடந்த மாத மத்தியில் நடைபெற்ற மடு மாதா ஆலய உற்சவத்தின்போது திறந்து விடப்பட்டிருந்த மடு வீதி, பின்னர் அப்பிரதேச மக்களின் போக்குவரத்துக்கு இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்தது தெரிந்ததே. ஆலயத்துக்குச் செல்லும் யாத்திரிகர்கள் மட்டுமே அந்த வீதியை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர்.

இதனால், பாதிக்கப்பட்ட அப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, வீதியை மறித்து தடையையும் ஏற்படுத்தியிருந்தனர்.

## எண்ணெய்க் குதங்கள் வாங்கியதால் பிரச்சினை

இந்திய அரச கம்பனிக்கு எண்ணெய்க் குதங்களை இலங்கை வழங்கியதால் பிரச்சினை எழுந்துள்ளது.

இலங்கையின் எண்ணெய்க் குதங்களை குத்தகைக்கு எடுத்ததில இலங்கை அரசுக்கும் இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கும் இடையில் இதுவரை உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

இந்திய எண்ணெய் நிறுவனம் இலங்கையிலுள்ள 100 எண்ணெய்க் குதங்களை 100 கோடி டொலருக்கு குத்தகைக்கு எடுக்க முன்வந்தது. எனினும், இப்போது அந்தநிறுவனம் 60 கோடி டொலர்களை மாத்திரமே செலுத்த முடியும் எனத் தெரிவித்துள்ளது. இதனால் தற்போது பெரும் சிக்கல்கள் எழுந்துள்ளன.

## அரியாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொலையைச் செய்தார்கள் என்றும் -

அவர்கள் இலங்கையர்கள் போலவே காணப்பட்டார்கள் என்றும் -

அந்தக் கோஷ்டியில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று சரியாகத் தெரியவில்லை என்றும் -

சம்பவத்தை நேரில் கண்டவர் தெரிவித்துள்ளார்.

கத்தியால் குத்தப்பட்டவர் உடனே வெம்பிளி மத்திய மிடில்செக்ஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் அங்கு மரணமானார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தீவிர குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றன[illegible].

கடந்த ஜூன் மாதம் வெம்பிளி பகுதியில் இலங்கை இளைஞர் கோஷ்டிகளிடையே இடம்பெற்ற மோதல்களில் இருவர் கொல்லப்பட்டார்கள என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3-51)

## அரசாங்க உத்தியோக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரியினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நிரந்தர சமாதானம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே வடக்கு-கிழக்கில் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில, தெற்கில் சமாதானத்தை முறியடிக்க கூடிய எத்தனையோ ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்று வருவதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். தவிரவும், அரசு பெருந்தொகைப் பணத்தையும், பொருள்களையும் விரயம் செய்து நிரந்தர சமாதானத்தை வேண்டி ஊர்வலங்களையும், நிகழ்வுகளையும் நடத்தி வருகிறது. இவை வெறும் கண்துடைப்பெனவே எண்ணத் தோன்றுகிறது.

யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' விழாவிற்கு தாங்களே தங்களினது சிறப்புப் பிரதிநிதியாக ஒருவரை அனுப்பி அவ்விழாவைச் சிறப்பித்தமையை நன்றியுடன் நினைவு கூருகிறோம். ஆனால்,மாவட்டத்திற்கு மாவட்டம் வெவ்வேறு அணுகுமுறையினை மேற்கொள்வது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது.

உண்மையான நிரந்தர சமாதானத்திற்காக மக்கள் தங்களை உணர்ச்சிபூர்வமாகத் தியாகம் செய்து , பல முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் இவ்வேளையில்,வவுனியா இராணுவம் நடந்துகொள்ளும் முறையை வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

நிரந்தர சமாதானத்திற்காக எக்கோணத்தில் இருந்தும் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்களையும் ஊக்குவிப்பதற்கு மாறாக மிரட்டல், பயமுறுத்தல் போன்ற செயல்களில் இருந்து விலகி, முழுச்சமூகமும் எதிர்பார்த்திருக்கும் நிரந்தர சமாதானத்திற்கு வழி சமைப்பதற்கு இராணுவம் முன்வரவேண்டும். மாறான செயற்பாடுகள் மீண்டும் ஒரு போர் மேகத்தையே உருவாக்கும் என்பதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது ஒன்றியம் [illegible]களை வேண்டி நிற்கிறது.

இப்படி ஒன்றியத் தலைவர் எஸ்.குலதேவராஜாவும்,செயலாளர் வி.குகேந்திரனும் தமது கடிதத்தில் பிரதமரைக் கேட்டுள்ளனர்.


நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை, சாவகச்சேரி.
A/L 2004 கலை, வர்த்தகம்
DAY CLASS
ஆரம்பமாகிவிட்டன.
ENGLISH CLASS
G.A.Q., பல்கலைக்கழக மாணவர்களுக்கானது
BY:நிஷாந்தன்
ஆரம்பம்: 03.09.2003 புதன் 11.00 a.m.

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி, யாழ்நகர்.
A/L DAY CLASS
ஆரம்பம்: 03/09/2003

CHEMISTRY
DIAS B.Sc. (Hons)
ORGANIC INORGANIC

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
A/L DAY CLASS
கலை, வர்த்தகம்
பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
வணிகக்கல்வி
B.S. பசீல்
ஆரம்பம்: 03.09.2003
நண்பகல்.12.00

Beacon
பொருளியல்
A/L 2005
P.Mohan B.B.A. (Hons)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
A/L DAY CLASS
கலை,வர்த்தகம்
பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன
பொருளியல்
S.வரதராஜன்
ஆரம்பம்:02.09.2003
மு.ப.8.00 மணி.

புதிய வீடியோ
CD வெளியீடு
தென்னவன்
வேறு வீடியோ

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி. யாழ்.நகர்.
A/L 2004
DAY CLASS
பிரிவு II
CHE.- திரு.அன்பழகன்
PHY.- திரு.சிவலிங்கம், திரு.பிரபா
BIO.- திரு.நாகநாதன்
Maths- திரு.குலசிங்கம், திரு.ராஜன்
★ CHEMISTRY புதிய பிரிவுகள் ஆரம்பம் 01.09.2003 11.30 a.m.
(22016)

IIS
New Batches
Start on 06.09.2003 at 10.00 a.m.
Diploma in Engineering Drawing & AutoCAD
Diploma in C++ Programming
Diploma in Information Technology
மேலதிக விபரங்களுக்கு :
இயக்குநர்,
IIS ,யாழ்ப்பாணம்.






உ
சிவமயம்
திருமண அழைப்பு
மணநாள் :ஆவணி 15(01.09.2003) திங்கட்கிழமை
நேரம் :காலை 9.15 மணி முதல் 10.30 மணிவரையில் வரும் சுபமுகூர்த்தம்.
இடம் :நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபம்
மணமகன்: சத்தியகுமார் அவர்கள்
மணமகள்: ஜெயந்தி அவர்கள்
இவர்களின் திருமண வைபவத்துக்கு எமது உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தனிப்பட்ட அழைப்புகள் இல்லை. இதனையே அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.
வரவேற்புபசாரம் : 02.09.2003 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
இவ்வணம்
மணமக்களின் பெற்றோர்கள்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 504 |
| திகதி | 29.08.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல. 5143849-5159898

வெற்றி இலக்கங்கள் **12 39 43 47**

லக்கினம்

மகரம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 2,602,900/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,400,400/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 357,226 | 10 | 3,572,260 |
| 2 இலக்கங்கள் | 32,773 | 20 | 655,460 |
| 1 இல + லக்கினம் | 32,423 | 30 | 972,690 |
| 2 இல + லக்கினம் | 2,982 | 100 | 298,200 |
| 3 இலக்கங்கள் | 880 | 500 | 440,000 |
| 3 இல + லக்கினம் | 73 | 5,000 | 365,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,602,900 | - |
| மொத்தம் | 426,362 | - | 6,803,610 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.6,803,610/-

தொடர் இல. 4161836க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 செப்டெம்பர் 02ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5145528-8-95
5151836-1-81
5144250-7-27
5155010-6-95
5149341-9-42

PHOENIX O&M



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் - தொடர் இல. 3880908 இருந்து 3900440 வரை
சீட்டிழுப்பு இல. 1431
திகதி 30.08.2003

வெற்றி எண்கள் **14 29 32 35 53**

போனஸ் எண் **18**

ஜக்பொட் பரிசு
ரூபா.3,437,250/- வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,437,250/- | 3,437,250/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 107 | 10,000/- | 1,070,000/- |
| 3 | 6,231 | 500/- | 3,115,500/- |
| 2 | 102,388 | 20/- | 2,047,760/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 14ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 128,181 | 10/- | 1,281,810/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.11,032,420/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.1,500,000/-

தொடர் இல. 2916923க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 செப்டம்பர் 03ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் மணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3895800-7-40
3891448-5-09
3884984-0-09
3892421-3-69
3882464-5-06

PHOENIX O&M


நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள

# மாணவருக்கு 'பெற்றோல்மக்ஸ்' வழங்க புலிகள் நடவடிக்கை

வலி.வடக்கு,செப்.1

வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதில் முதற்கட்டமாக இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் மாணவர்கள் இரவு நேரங்களில் கல்வி கற்பதற்கு வசதியாக 'பெற்றோல்மக்ஸ்' விளக்குகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் சில வற்றிற்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய நலன்புரி நிலையங்களுக்கு வெகுவிரைவில் 'பெற்றோல்மக்ஸ்' விளக்குகள் வழங்க உரிய நடவடிக்கைகளை வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் மேற்கொண்டுள்ளார். (ஔ-86)

ஜூன், ஜூலை மாதங்களுக்கான

# 'விடுதலைப் புலிகள்' ஏடு நேற்று வெளியிடப்பட்டது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் ஜூன் - ஜூலை மாதங்களுக்குரிய இதழ் வெளி வந்துள்ளது.

"பேரினவாத உணர்வு நிலையிலிருந்து ரணில் அரசு மீண்டு வர வேண்டும்"என்ற முகப்புச் செய்தியுடன் இந்த ஏடு வெளியிடப்பட்டுள்ளது.

"83 ஜூலை இனப்படுகொலை, இருபதுவருட நிறைவு"என்ற ஆசிரியத் தலையங்கத்துடன் க.வே.பாலகுமாரன் எழுதிய "நாங்களும் எங்கள் நம்பிக்கைகளும்"அல்லது "மனம் வெளுக்க வழியுண்டா"என்ற அரசியல் கட்டுரையும் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் உருவாக்கம் தொடர்பான சு.அரசண்ணா எழுதிய "தேசிய எழுச்சிப் பேரவை; ஒரு வலுவான மக்கள் கட்டுமானம்" என்ற கட்டுரையும் இந்தோனேஷியா-ஆச்சே சுதந்திரப் போராட்ட விவரிப்பு கட்டுரையான "எவருக்கும் கேட்காத ஆச்சே மக்களின் குரல்" மற்றும் "குரங்குபாஞ்சான் தங்ககம் - சர்ச்சைக்கு அப்பாற்பட்டது" கலாநிதி சோமஸ்கந்தன் எழுதிய "யாழ். நூலக எரிப்பும் அரச பயங்கரவாதமும்" போன்ற கட்டுரைகளும் மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புகள் விமர்சனங்களுடன் இவ் ஏடு வெளிவந்துள்ளது.




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவிகள் சங்க கனடாக்கிளை அண்மையில் கனடாவில் நடத்திய ஒன்றுகூடலில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பழைய மாணவியும், இளைப்பாறிய பிரதி அதிபருமான செல்வி தனம் வேலுப்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

அருகில் ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவரான டாக்டர் எஸ். சண்முகவடிவேல், பழைய மாணவி திருமதி நல் அருளானந்தம் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (எ-173)

மின்சார நிலைய வீதியில் இருந்து எழும்

# வாகனங்களின் பேரிரைச்சலால் யாழ். ஆஸ்பத்திரி நோயாளர் சிரமம்

## முறைப்பாடு செய்தும் பயனில்லையாம்!

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ். ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக மின்சார நிலைய வீதியிலிருந்து எழுகின்ற பேரிரைச்சல், யாழ். ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு பெரும அசௌகரியங்களை விளைவிப்பதாகக் கூறப்படுகிறது.

யாழ். மின்சார நிலைய வீதியில் உள்ள படையினரின் வாகனச் சீர் களத்திலிருந்தே இந்த இரைச்சல் எழுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சூழலை மாசுபடுத்தும் வகையிலும், வைத்தியசாலை நோயாளர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையிலும் இரவு பகலாக எழுந்து கொண்டிருக்கும் இந்த மிகை இரைச்சல் தொடர்பாக வைத்தியசாலை வட்டாரங்கள் பல தடவை படைத்தரப்புக்குச் சுட்டிக் காட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வைத்தியசாலை நோயாளர்களின சிரமத்தை கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் துரித நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ-9)

# சித்திரக் கண்காட்சி

கொக்குவில்,செப்.1

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் ஓவியத்துளிர் கழக மாணவர்கள் நடத்தும் சித்திரக் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் வியாழக்கிழமை வரை தினமும் முற்பகல் 9 மணி முதல் 4 மணிவரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியை உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் திறந்துவைப்பார்.

இந்தக் கண்காட்சியில் மாணவர்களால் உருவாக்கப்பட்ட சிகிரியாக் குகை, எகிப்து, இலங்கை, யுராசிக் பாக் போன்றன மாணவர்களுக்கு மிகப்பயனுள்ள அம்சங்கள். இவை பெரிய தோற்றத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன என வித்தியாலய அதிபர் செ.செல்வராசா தெரிவித்துள்ளார். (எ-76)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை நிர்வாகசேவை பரீட்சையில் சித்தி பெற்று, இன்று நியமனம் பெறும் எமது கல்வி நிலைய ஆசிரியர்

**திரு.சுப்பிரமணியம் முரளிதரன் (பாபு)**

அவர்களை மேலும் பல சிறப்புகள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

'அறிவகம்' கல்வி நிலையம்,
அச்சுவேலி. (21999)

இயக்குநர்.
ஆசிரியர்கள். மாணவர்கள்.

(21-16-18)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கை மண்ணின் முதன்முதலாக இலங்கை அரசின் நிர்வாக சேவை அதிகாரியாக திறமையுடன் சித்தியெய்தியமையை இட்டு

**திரு.சண்முகராசா சிவசிறி**

அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்தி அவரது வாழ்வின் உயர்விற்காக சங்கானை செங்கற்படை பிள்ளையாரின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(22060) திரு.நி.சிவநட்சணாமூர்த்தி குடும்பம்
*தொட்டிலடி, சங்கானை.*

(21-16-18)


## தனிநாயம் அடிகள் நினைவு உரைகள்

யாழ்ப்பாணம்,செப்.1

தமிழறிஞர் தனிநாயகம் அடிகளாரின் 90ஆவது பிறந்த நாளையும் 23ஆவது மறைந்த நாளையும் ஒட்டி இன்று இரு இடங்களில் தமிழீழ விடுதலை அணி பொதுச் செயலாளர் மா.க.ஈழவேந்தனின் நினைவுச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

"தமிழ் இலக்கிய உலகில் தனிநாயக அடிகளார் ஏற்படுத்திய தாக்கம்" என்ற தலைப்பில் இன்று காலை 8.30 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரியலும் -

'தமிழால் உலகாண்ட தனிநாயகம் அடிகளார்' என்ற தலைப்பில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் ஈழவேந்தனின் சொற்பொழிவுகள் இடம பெறவுள்ளன.

(ஒ-3)

## தாலிக்கொடி அபகரிப்பு

வட்டுக்கோட்டை,செப்.1

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியையின் தாலிக் கொடி சைக்கிளில் வந்த நபரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

பதினெழு பவுண் எடையுள்ள தாலிக்கொடியே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது. (எ-161)


## பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு



**செல்வி சர்மிலா பாலச்சந்திரன்**

காலம்: இன்று(01-09-2003) திங்கட்கிழமை
நேரம்: காலை 10.00 மணிமுதல் 1.00 மணிவரை
இடம்: மல்வம், உடுவில்

பூப்புப்புனித நீராட்டு விழாவுக்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மல்வம்,
உடுவில்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. பாலச்சந்திரன் (சந்திரன்)
திருமதி பா.தவநிதி.

(C/29889) (26) (21-16-18)



உ
முருகன் துணை



## நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம் - 2003

இன்று (01.09.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

☆ தேர்த்திருவிழா 09.09.2003 செவ்வாய்க்கிழமை
☆ தீர்த்தத் திருவிழா 10.09.2003 புதன்கிழமை
☆ பூங்காவனம் 11.09.2003 வியாழக்கிழமை
☆ வைரவர் பொங்கல் 12.09.2003 வெள்ளிக்கிழமை

☞ அனைத்து அடியார்களும் வந்து எம்பெருமான் திருவருள் பெறுமாறு அழைக்கப்படுகின்றனர்.

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்

அமுதக்கடல்
2541/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சமுத்திரா ரேட்ஸ்,
141, நவீனசந்தை,யாழ்ப்பாணம்.

(21969) (25-16-18)



# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் யாழ்.மாவட்டம்

## செப்ரெம்பர் 01-07

✱ மீளக்குடியமர அல்லது தொழில் நிமித்தம் புதிய இடத்திற்குச் செல்லும் போது அவ்விடம் ஆபத்தானதா என அவ்வூர் வாசிகளிடம் கேட்டு அறிந்துகொள்வோம்.

✱ ஆபத்தான பிரதேசங்களைத் தவிர்த்து நடப்போம்.

ஆபத்தான பிரதேசங்களாவன,

☞ கைவிடப்பட்ட,

✪ இராணுவ மண் அரண்கள் (பண்ட்) ✪ காவல் நிலைகள் ✪ பதுங்குகுழிகள் ✪ வீடுகள் ✪ வயல் நிலங்கள் ✪ இராணுவ எச்சங்கள் உள்ள இடங்கள்.

☞ மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகை போடப்பட்ட இடங்கள்.

☞ முள்ளுக்கம்பிச் சுருள் உள்ள இடங்கள்.






ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்

**DISTRICT MINE ACTION OFFICE, JAFFNA**

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(C/29878) (21-18-16)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வைத்தியரின் சொந்தப் பாவனையிலுள்ள நல்ல நிலையிலுள்ள 50 ஸ்ரீ **Toyota Hiace** விற்பனைக்கு உண்டு. (சகல ஆவணங்களுடனும்) தொடர்பு: தார்சீசியஸ், அழகு, 237, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (பிலிப் நேர்ஸிங் ஹோமுக்கு முன்னால்). **T.P.** 589608. (22033)

நல்ல நிலையிலுள்ள **Morriss Minor Car** உடன் விற்பனைக்கு உண்டு (4ஸ்ரீ--- தொடரிலக்கமுடையது). தொடர்பு: பெ.முத்தையா, 131, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். இன்று முதல் பார்வையிடலாம். (22083)

தரமான இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: ரவி (தபால் அலுவலகம் அருகில்), ரவி உணவகம், தணங்களப்பு வீதி, சாவகச்சேரி (24 மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம்). (C/29900)

## காணிதேவை

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளை அண்டி 2 பரப்புக் காணி உடன்தேவை. தொடர்பு: 077-6103233. (22087)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, **B.Sc.(Hons)**, தனியார் நிறுவனத்தில் நிர்வாகியாகத் தொழில்புரியும், 5'5", அச்சுவினி 4ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய் (பாவம் 44), வயது 28, அழகிய மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சீதனம் வழங்கப்படும். வெளிநாட்டு பொறியியலாளர்களும் மற்றும் பலரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 2011, உதயன் யாழ்ப்பாணம். (22089)

யாழ். இந்து, வயது 48, தாரமிழந்த பட்டதாரி ஆசிரியைக்கு, வாழ்க்கைத்துணை தேவை. அரசசேவையில் உள்ள தாரமிழந்தவர்களும் விவாகரத்துப்பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விள.இல.2012, மே/பா. உதயன். யாழ்ப்பாணம். (C/29901)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1964 இல் பிறந்த, விசாக நட்சத்திரம், 4 இல் சூரியன், செவ்வாய், உயரம் 5' 5", கனடா சிற்றிசன் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. தொடர்பு: (1) கல்யாணமாலை திருமணசேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2) 67/A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13. **T.P.**: 338162. (22066)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1965இல் பிறந்த, உயரம் 5'3", திருவோண நட்சத்திரம், ஆஸ்திரேலியா சிற்றிசன் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: (1)கல்யாணமாலை திருமணசேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (2) 67/A, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13, **T.P.**: 338162. (22067)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஐரோப்பிய நாடொன்றிலிருந்து வருகைதந்து இங்கு சொந்தமாக தொழில் நடத்தவுள்ள, 1968, கார்த்திகை 4ஆம் பாதம், மொத்த கிரக பாவம் 25 உள்ள மணமகனிற்கு படித்த, அழகிய மணமகளை பெற்றோர் விரைவாக எதிர்பார்க்கின்றனர். (அனுப்பப்படும் ஜாதகங்கள் உடன் கவனத்தில் எடுக்கப்படும்) தொடர்பு: விள. இல. 2005 மே/பா உதயன். (21947)

## விற்பனைப் பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்தின் கசெற், CDகளை யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.

மூர்த்தி வீடியோ அன் எலக்ரோனிக்ஸ்
மானிப்பாய்.

(22096) (11-13-24)

## இருதயநாதர் சிற்றாலயம் புனரமைப்பு

குருநகர்,செப்.1

யாழ். மடம் வீதியில் அமைந்துள்ள திருஇருதயநாதர் சிற்றாலயம் இப்பகுதி மக்களால் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கான நிதியை இப்பகுதி மக்கள் வழங்கியுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இச்சிற்றாலயத்தின் அருகில் உள்ள வீதியில் ஒரு பகுதி சேதமடைந்து பள்ளமாகக் காணப்படுவதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். (ஓ-51)

## வரணி திருச்சபையில் தொழிற்பயிற்சிகள்

வரணி,செப்.1

வரணி தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தையல், தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்), கேக் அலங்காரம், பூஅலங்காரம் ஆகிய தொழிற் பயிற்சி நெறிகளே இவ்வாறு ஆரம்பிக்கப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெறவிரும்புவோரை வரணி திருச்சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-170)

## வெளிவருகின்றது

NEW MP3
அலை உட்பட அனைத்தும்
புத்தம் புதிய பாடல்கள்.
120/= மட்டுமே!
வியாபாரிகளுக்கு
விசேட கழிவு உண்டு.

மூர்த்தி வீடியோ அன் எலக்ரோனிக்ஸ்
மானிப்பாய்.
T.P.: 021 2884 (22095)

## TELEVOICE நிறுவன சேவை

யாழ். மக்களே!

மேசைத் தொலைபேசியை இலங்கையில் அறிமுகஞ்செய்த நிறுவனம்!

TELICA CELULAR இவர்களின் இணை நிறுவனம் இப்பொழுது யாழ். நகரில் மேசைத் தொலைபேசி சேவையைத் தெளிவான சிக்கலில்லாத முறையில் உங்களுக்கு வழங்கி வருகின்றது.



**TELEVOICE**



இரவில் முற்றிலும் இலவசம்

நீங்கள் வீட்டிலிருந்து கொண்டே உறவினர்களுடன் உரையாடி மகிழ வேண்டுமா?

மொபிட்டல் பில் கனெக்ஷன் செய்து தரப்படும்.

உங்கள் தொடர்புகளுக்கு
டெலிவொய்ஸ் நிறுவனத்தை நாடுங்கள்!

IDD இணைப்பு இலவசம்

0777 - 067389 | 0712 335580

எமது கிளை:
மோர் ஸ்ரீட், திருகோணமலை,
0712 335597

*13, GRAND BAZAAR, JAFFNA.*

(22077) (26-11-13-24)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தொல்புரம் கிழக்கு **திரு. கந்தசாமி நந்தகுமாரன்** அவர்களும்



**திருமதி நளாயினி நந்தகுமாரன்** அவர்களும்



*நீதி அமைச்சினால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளதையிட்டு தொல்புரம் பொது அமைப்புக்களால் நடத்தப்படும்.*

# பாராட்டு விழா

*இடம்:-* தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலைய முன்றில்
*காலம்:-* நாளை (02.09.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00மணி (புதிய நேரம்)
*தலைமை:-* **திரு. தி. உதயசூரியன்,** சமாதான நீதிவான் அவர்கள்
*(தொல்புரம் பொது அமைப்புகள் சார்பாக)*

விழாநாயகர்கள் அவர்களது இல்லத்திலிருந்து மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டு, பாராட்டு விழா தொடர்ந்து நடைபெறும்.

விழாநாயகர்களது சமய, சமூகப்பணிகள் தொடர்ந்து சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்.

விழாவைச் சிறப்புற நடத்தி வாழ்த்துவோர்:
தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்,
தொல்புரம் மடத்தடிப் பிள்ளையார் - சுப்பிரமணியர் சுவாமிகோயில் தர்மகர்த்தாக்கள் சபை, பரிபாலனசபை, அன்னதான சபை,
தொல்புரம் துறையன்வளவு பிள்ளையார் கோயில் பரிபாலனசபை,
தொல்புரம் துறையன்வளவு ஐக்கிய நாணய சங்கம்,
தொல்புரம் கிழக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அலகு,
தொல்புரம் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
யா/தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய பாடசாலை,
அபிவிருத்திச் சங்கம் / பழைய மாணவர் சங்கம்.

(22064) (26-11-13-24)

## அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளினால் அறவிடப்படும் பயணக் கட்டணங்கள் யாவும் **01.09.2003** தொடக்கம் இ.போ.சபையின் சேவைக்கு அறவிடப்படும் கட்டணங்களுக்குச் சமமாகவே அமையுமென்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* **தலைவர்,**
(22073) (26-11-13-24) யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் **சங்கம்.**

## தொழிலாளர் தேவை

எமது நிறுவனத்துக்கு கீழ்வருவோர் தேவைப்படுகின்றனர்.
(1) மேசன்
(2) கூலித்தொழிலாளர்

தகுதியுடையோர்கள் உடன் நேரில் சமுகந்தரவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

தொடர்பு: **யூரோவில்,**
**866, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(22079) (26-11-13-24)

## வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
*திரு.குமாரசிங்கம் குணநாதன்*
*அவர்கள் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக இன்று பதவியேற்பதையிட்டு அவரை உளமார வாழ்த்துகின்றோம்.*

**அதிபர்,**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

*யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.*

(22012) (26-11-13-24)



## குவலயம் காக்கும் விநாயகன் குடநீராடி அருள்கின்றான்

கரப்பிட்டியந்தனை உறைந்தருளும் கணபதிக்கு குடநீராட்டு
காரைநகர் களபூமி மக்களின் கண்கண்ட இறைவனுக்கு குடநீராட்டு
வரமெலாம் அருளி வளமெலாம் பெருக்கும் வக்ரதுண்டருக்கு குடநீராட்டு
வழிதனிலிருந்து வழிபடும் அன்பரின் நலம்காக்கும் ஐங்கரனுக்கு குடநீராட்டு
குறையெலாம் போக்கி குவலயம் காக்கும் விகடனுக்கு குடநீராட்டு
கொம்பொடித்து பாரதத்தை அருளிய கொம்பனுக்கு குடநீராட்டு
நறைவெலாம் பெருக்கி நிரந்தர தீர்வருளும் பெருமானுக்கு குடநீராட்டு
நினைப்பதை நிறைவேற்றும் கரப்பிட்டியந்தனையானுக்கு குடநீராட்டு.

- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.

*(இன்று (01.09.2003) காரைநகர் களபூமி கரப்பிட்டியந்தனை கற்பக விநாயகனின் கும்பாபிஷேக பெருவிழா சிறக்கவும் பெருமானின் திருவருளை வேண்டுவோர்)*

*"யாழ். காலணியகம்"* (பாட்டா ஏஜென்சி)
இல.11, நவீன சந்தை - ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
**T.P.-2223152.** (C/29889)

(11-13-24)

## JAFFNA TECHNICAL INSTITUTE
## JAFFNA SRILANKA

REGD. NO: 15251 T.P:2223335

## தொழிற்பயிற்சிகள்

- **RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING**
சகல இன ரேடியோ, ரீ.வீ, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
- **MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**
சகல இன மோட்டார், (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைன்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)
- **MOTOR CYCLE MECHANISM**
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)
- **AIR CONDITIONING AND REFRIGERATION**
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)
- **CITY AND GUILDS OF LONDON EXAM.**
**1.POWER 2.ELECTRONICS**
- பொறியியல்பீட மாணவர்களுக்கான இலத்திரனியல் பாடநெறி (Personal Class) விசேடமாக குறுகிய காலத் தவணையில் நடைபெறுகின்றது.

## புதிய பயிற்சிகள் ஆரம்பம்

05.09.2003(கிழமை நாள்களில்)
06.09.2003 (சனி, ஞாயிறு நாள்களில்)

மேலதிக விவரங்களுக்கு நேரில்

- DIRECTOR

*11/10 B, Stanley Road, Jaffna (முட்டாசுக்கடைச் சந்தி).* **NO.-07, Palaly Road, Jaffna.**

(11-18-24) (22104)

# கூட்டணியினரின் தளம்பல்போக்குக்கு இந்தியாவின் அழுத்தங்களே காரணம்!

## கருத்தரங்கில் விநாயகமூர்த்தி எம்.பி. உரை

யாழ்ப்பாணம்,செப்.1

இந்திய அரசு தரும் அழுத்தங்களே தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் இன்றைய தளம்பல் போக்குக்கு காரணம்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின்



தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி.

சமகால அரசியல் தொடர்பாக இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஏற்பாட்டில் நேற்று காங்கிரஸ் இல்லத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முட்டிக்காசு சேர்த்து மற்றவர்களுக்கு அடிபணிந்து வளர்ந்த கட்சியல்ல தமிழ்க் காங்கிரஸ்கட்சி. இந்தியாவிடமிருந்தோ அதன் உளவு அமைப்பான 'றோ'விடமிருந்தோ அன்றி இலங்கைப் பேரினவாதக் கட்சிகளிடமிருந்தோ நிதிபெற்று தேர்தலை எதிர் கொண்டவர்கள் அல்லர் நாம். அதனால்தான் நாம் இன்று எச்சக்திகளுக்கும் அடிபணியாது தனித்துவத்துடன் - ஒரே கொள்கையுடன் - செயற்பட முடிகிறது.

· விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றும், தலைவர் வே.பிரபாகரன் தான் தேசியத்தலைவர் என்றும் முதன்முதல் சர்வதேசத்திற்கும், சிங்கள பேரினவாதிகளுக்கும் எடுத்துக்கூறிய பெருமை மாமனிதர் குமார் பொன்னம்பலத்தைச் சாரும். அந்தக் கொள்கையைத்தான் எமது கட்சி இன்று வரை பின்பற்றி வருகிறது.

எமது கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கொள்கையளவில எத்தகைய வேறுபாடும் இல்லை. அதனை நாம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். நாங்கள் பிற கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்தபோது பலர் எம்மை விமர்சித்தனர். யாழ். குடாநாட்டு மக்களை பாதாள உலகத்திற்கும் இட்டுச் சென்ற ஈ.பி.டி.பி. போன்ற தேசவிரோதக் கட்சிகளை இங்கிருந்து ஒழிப்பதற்கும், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான என்பதனை வலியுறுத்தவுமே நாங்கள் கூட்டுச்சேர்ந்தோம்; அதில் வெற்றியும் கண்டோம்.

அண்மைக்காலமாக அரசியலில் ஒரு தெளிவற்ற நிலை உருவாகி வருகின்றது. சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்வதை சில தீயசக்திகள் விரும்பவில்லை. அதனைக் குழப்புவதற்கு பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டுக் கொண்டே அவை இருக்கின்றன.

கடந்தகாலங்களில் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பயன்படுத்தித் தமது அரசியலை நடத்திவந்தார்கள். அதனையே இன்றும் சில கட்சிகள் செய்ய முனைகின்றன. அந்தவகையில், ஜே.வி.பி. போன்ற சமாதான விரோத சக்திகள் தமிழருக்கெதிராகவும் சமாதானத்தைக் குழப்புவதற்கும் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்து வருகின்றன. இதுதான் இன்றைய தெற்கின் அரசியல் நிலைப்பாடு.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கு விரைவில் பொதுத்தேர்தலை நடத்த விருப்பம். ஆனால், சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் காலத்தில் தேர்தலை வைக்கமுடியாது. அதற்காக சமாதானப் பேச்சுக்களைக் குழப்புவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்து வருகின்றார். அவருடைய இந்தச் சதி முயற்சியில் முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஆறுமுகம தொண்டமானும் சிக்கியுள்ளனர். இவர்களைத் தம்பக்கம் ஈர்த்து, தற்போதுள்ள ரணிலின் அரசைக் கவிழ்த்து, புதிய அரசைக் கைப்பற்றுவதற்கு ஜனாதிபதி கனவு காணுகின்றார். சில அரசியற் கட்சிகள் சமாதானம் ஏற்படுவதனை விரும்பவில்லை. தங்களுக்கு ஆட்சி அதிகாரங்கள் கிடைத்தால் போதும் என்ற நப்பாசையில் அவை செயற்படுகின்றன.

பிரபாகரனை கடவுளாக அறையில் வைத்து கும்பிடப்போவதில்லை. புலிகள் இரு என்றால் இருப்பதற்கும் எழுந்திரு என்றால் எழுவதற்கும் நாம் தலையாட்டும் பொம்மைகள் அல்ல என்று கூட்டமைப்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் வாதிகள் சிலர் கூறுகின்றனர்.

இந்தியத் தூதுவர் கொடுத்த அழுத்தங்களே இவர்களுடைய இந்தத் தடுமாற்றமான போக்குக்கு முக்கிய காரணம்.

கூட்டணி அரசியல்வாதிகள் பலின குடும்பங்கள் இந்தியாவிற் தஞ்சமடைந்திருப்பதும், கடந்த காலங்களில் இந்தியாவிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக்கொண்டமையாலும் இந்தியாவின் அழுத்தங்களுக்கு கட்டுப்படவேண்டிய நிலை அவர்களுக்கு உண்டு. ஆனால், எங்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. நாம் சுதந்திரமாகச் செயற்படுகிறோம்.

விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்கமுடியாது என்ற நிலைப்பாட்டிற்கு கூட்டணியினர் தற்போது வந்துள்ளனர். இதனை கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி மற்றும் ரவிராஜ் போன்றோர் வெளிப்படையாகச் சொல்கின்றனர். மற்றவர்கள் அதனை மறைமுகமாகக் கூறுகின்றனர். இதற்குக் காரணம் இந்தியாவின் தலையீடுதான் என்பதனை எவரும் மறுக்கமுடியாது.

சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளை அங்கீகரித்துள்ள தற்போதைய நிலையில், புலிகளைப் பற்றி கதைப்பதற்கோ அன்றி விமர்சிப்பதற்கோ கூட்டணியினருக்கு அருகதை கிடையாது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கடந்த இருபது வருடங்களில் எத்தகைய அரசியலை மேற்கொண்டார்களோ அதே அரசியலை மீண்டும் செய்யமுற்படுகின்றனர். அதனை செய்யவேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

சிலவேளையில் ஒரு தேர்தலை சந்திக்க வேண்டியநிலை ஏற்பட்டால் நாம் விரும்பியோ விரும்பாமலோ அத்தேர்தலில் எமது கட்சி தனித்து நின்று போட்டியிட வேண்டிய நிலை உருவாகலாம். அதற்கு ஏற்றவகையில் நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். எதிர்வரும் காலங்களை எமது கட்சித் தொண்டர்கள் ஊர் ஊராகச் சென்று கட்சியின் கொள்கைகளையும், அரசியல் உண்மை நிலைப்பாட்டையும் மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

அண்மையில் தென்பகுதியில் வெளிவந்த பத்திரிகை ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இரகசியப் பேச்சில் ஈடுபட்டதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதனை முற்றுமுழுதாக மறுத்துள்ள நாம், இச்சந்திப்பில் யார்யார் கலந்துகொண்டார்கள் என்பதை வெளிப்படுத்துமாறு அந்தப்பத்திரிகையின் ஆசிரியரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

உயர்பாதுகாப்பு வலயத்தினால் இங்கு பயங்கரமான நிலை உருவாகி வருகிறது. வலிகாமம் வடக்குப்பகுதியை அபிவிருத்தி செய்வது என்றால அங்குள்ள சிமெந்து ஆலை, பலாலி ஆசிரிய கலாசாலை, காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை விட்டுவிட்டு அபிவிருத்தி செய்யமுடியாது. மயிலிட்டியிலுள்ள மீன்பிடி இறங்குதுறையை விட்டுவிட்டு மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யமுடியாது.

அந்தவகையில், இங்குள்ள உயர் பாதுகாப்புவலயம் உடனடியாக அகற்றப்படவேண்டும் என்பதில் நாம் மிக உறுதியாக இருக்கின்றோம்.

- என்று அ.விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவித்தார். (ஓ-5-ரி)

### சுதந்திரக் கட்சியின் 52 ஆவது மாநாடு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 52 ஆவது வருடாந்த மாநாடு நாளை செவ்வாய்க்கிழமை குளியாப்பிட்டிய, மாளிகாபிட்டியில் நடைபெறும். பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இம் மாநாட்டுக்குகட்சியின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை வகிப்பார்.

'மாற்றத்துக்குத் தயாராவோம்' என்னும் தலைப்பில் இம்மாநாடு நடைபெறும். ஐதேகவைத் தவிர ஏனைய சகல கட்சிகளும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றன என்று கட்சியின் பொதுச செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார்.

## இம்மண்ணில் இடம்பெறுகின்ற அபிவிருத்தியை கண்காணிப்பது எழுச்சிப் பேரவையின் கடமை!

### செம்மனன் வலியுறுத்து

வலி.வடக்கு, செப்.1

இம்மண்ணில் இடம்பெறக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதிலும், எத்தகைய திட்டங்கள் இங்கு செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதிலும் பெரும்பங்கை தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கொண்டுள்ளார்கள்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் க.செம்மணன் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் சங்கமம் செயலாளர் த.தனபாலசிங்கம் தலைமையில் அளவெட்டி மகாஜன சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்ததாவது:-

தேசிய எழுச்சிப் பேரவை தேசத்தின் விடுதலைக்காகவும் அபிவிருத்திக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. பேரவையின் இலக்கை அடைவதற்கு இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் முழுமையான பங்களிப்பை வழங்கவேண்டும்.

இலக்கை அடைவதற்கு அவர்கள் கடுமையாக உழைக்கவேண்டும்.

தேசிய எழுச்சிப்பேரவையே அப்பிரதேசத்தின் முதன்மை அமைப்பாக செயற்படும். இதில் அங்கம் வகிப்பவர்கள் சமூகத்தின் முன்னோடிகளாகவும் எடுத்துக்காட்டுக்கு உரியவர்களாகவும் இருக்கவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் தேசியக் கொடியை வலிகாமம் கோட்டப் பொறுப்பாளர் வே.தமிழ்மறவனும், பொதுச்சுடரை வலிகாமம் கோட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி வசந்தி, பிரதேசப் பொறுப்பாளர் ஜனா மற்றும் மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றி வைத்தனர். (ஒ-86)

## 'செலிங்கோ' காப்புறுதி நிறுவனத்தில் மோசடி செய்த அதிகாரி தலைமறைவு

### பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

'செலிங்கோ' காப்புறுதி நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் வாடிக்கையாளர்களிடம் இருந்து பல லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகியுள்ளதாக அந்நிறுவனத்தின் பொது முகாமையாளர் நா.ஜெகநாதன் தெரிவித்தார்.

இந்த அதிகாரி பல லட்சம் ரூபா பணத்தை வாடிக்கையாளர்களிடம் பெற்றுக்கொண்டு அவர்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்கவில்லை என்றும் -

வாடிக்கையாளர்கள் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அந்தப் பணம், அவர்களது கணக்கில் சேர்க்கப்படாமை தெரிய வந்ததாகவும் -

இச்சம்பவம் தொடர்பாக நிறுவனம் உள்ளக விசாரணைகளை மேற்கொண்டபோது அந்த அதிகாரி நிதி மோசடியில் ஈடுபட்ட விடயம் உறுதிப்படுத்தப்பட்டதால் கடந்த மாதம் அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார் - என்றும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த நபர் கடந்த 6 மாதங்களாக 'செலிங்கோ' காப்புறுதி நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தில் கடமையாற்றிவந்தார் என்று அந்த நிறுவனப் பொதுமுகாமையாளர் நா. ஜெகநாதன் தெரிவித்தார். (ஒ-ரி)

## தமிழின் நிலையை மேம்படுத்த பொது ஒலிப்பு முறை அவசியம்

**தமிழுக்குப் பெரும் தொண்டாற்றிய தவத்திரு. தனிநாயகம் அடிகளாரின் 23ஆவது நினைவு தினம் இன்றாகும். அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி நினைவு தினத்தையொட்டி பிரசுரமாகிறது.**

நாட்டைவிட்டுப் பெயர்ந்து ஏறக்குறைய ஈராண்டுகள் ஆகிய பின்னர், தமிழ் திருநாட்டை மீண்டும் என் கண்கள் பார்த்தன. இவ்வீராண்டுகளில் நான் மலாயா, சீனம், ஜப்பான், வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, நடு ஆபிரிக்கா, வட ஆபிரிக்கா, இத்தாலி, பலத்தீனம், எகிப்து என்னும் இந்நாடுகளைக் கண்டுவந்தேன்.

தமிழைப் பொறுத்தவரை நான் அடைந்த பெருவியப்பு, தமிழும் தமிழரும் உலகிற் பரவியிருக்கும் வகை கண்டு ஏற்பட்டதேயாம். பர்மாவில் தமிழ் மொழிக்குச் செல்வாக்குண்டு. நடுஅமெரிக்காவின் தீவுகளாகிய திரிநாடு, ஜமேக்கா, அட்லாண்டிக்கத் தீவுகளாகிய மார்த்தீனிக்கு, ஆபிரிக்காவின் பல பிரிவுகள், இன்னோரன்ன இடங்களுக்குச் சென்ற தமிழர் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும், மலாயாவிற்குச் சென்றபொழுது நான் அடைந்தது போன்ற வியப்பு வேறு எவ்விடத்திலும் நான் அடைந்தேன் அல்லேன். அங்குள்ள இந்தியர்களில் தமிழரே பெரும்பகுதியினர். அங்கு தமிழ் நாட்டுச் செய்தித்தாள்கள் நான்கு ஐந்து வெளியிடுகின்றனர். சிங்கப்பூர், கோலாம்பூர் முதலிய பேரூர்களின் வானொலி நிலையங்கள், தமிழில் நாள்தோறும் ஒலிபரப்புகின்றன என்பது அறிந்தும் பெரிதும் மகிழ்ந்தேன். மேலும், நான் அங்கு சென்றிருந்தக்கால் மலாயாவின் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவத்திட்டங்கள் வகுத்து வந்தனர். அப்பல்கலைக்கழகத்தில், தமிழிற்கும் ஒரு பேராசிரியக்கட்டில் நிறுவவேண்டும் என்று இலங்கைத்தமிழரும் இந்தியத்தமிழரும் முயன்று வந்தது என் களிப்பிற்கு இன்னுமொரு காரணமாயிற்று.

தமிழ் ஒலிகள், உரையாடுதலில் ஊர்தோறும் வேறுபடுவது குறிப்பிடத்தக்கது. மலையாள நாட்டின் எல்லையில் இருப்போர், மலையாளம் பேசுவது போலத் தமிழைப் பேசுவர். சிங்கள நாட்டில் இருப்போர், சிங்களத்தைப் போல தமிழை உச்



சரிப்பர். இவ்வாறே, மலாயாவில் சீன மொழியைப் போலவும், அமெரிக்கத் தீவில் ஆங்கிலத்தைப் போலவும் தமிழை ஒலித்து வருகின்றனர். எனினும், இத்தமிழ் ஒலி வேறுபாடுகளை நீக்கி, மேல்நாட்டு மொழிகளுக்கு உள்ளதைப் போன்ற பொது நிலை ஒலிப்பு ஒன்றை பரப்புவது, தமிழ்ப் பாதுகாப்பிற்குப் பெரு நலந்தினைப் பயக்கும். நம் வெள்ளித்திரை நடிகரும், வானொலி உரையாளரும், இப் பொதுநிலை ஒலிப்பைக் கடைப்பிடிப்பாரெனின், இவ்வொலிப்பு எங்கும் எளிதில் பரவிவிடும். ஆங்கிலத்திற்கு பி.பி.ஸியின் ஒலிப்புப் பொதுநிலை விதியாயிருத்தல் போல, தமிழிற்கும் யாதேனுமொரு பொதுநிலை ஒலிப்பு வேண்டும்.

தமிழன் தன்மொழியைக் காதலிப்பது போல வேறெவரும் தம் மொழியைக் காதலிப்பதையோ தமிழ்ப் புலவர் தம் மொழியைப் போற்றுவது போல, வேறெவ்விலக்கியத்திலும் யாரேனும் தம் மொழியைப் போற்றுவதையோ, கண்டிலேன். சேக்கிழாரை விரித்துப் பார்மின். அவர் தமிழ் என்னும் சொல்லைத் தம் செய்யுளில் அமைக்க வேண்டுமெனின், அதற்கு அடை இல்லாமல் எழுதப் பின்வாங்குவர் 'செந்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ், அருந்தமிழ், செழுந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில்தமிழ், தேன் பொழியும் செந்தமிழ்' - என்றெல்லாம் யாழினும் இனிதிசைப்பர். இனி, தேவாரங்களைப் பாடினார் என்னும் பொருளில் 'தமிழ் பாடி யறைந்தார்', 'தமிழ் மாலைகள் சாற்றினார்' என்று அப்புலவர் கூறுவதை யார்தான் நினைநது நினைந்து இன்புற்றிலர்? மேலும், திருமூலர், "என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறுவது போலெல்லாம், பிறமொழிப் புலவர் தம் மொழியைப் போற்றிக் கூறியதாகத் தெரியவில்லை. தமிழரின் இத்தமிழ்ப் பற்றுத்தான், மலாயாவின் தமிழர் என் விரிவுரைகளைக் கேட்க நெடுந்தொலைவிலிருந்து வருவதற்கும் நான் செய்த சிறுதொண்டைத் பெரிதாகப் போற்றுவதற்கும் காரணமாய் இருந்தது. உலகிலிருக்கும் தமிழரனைவரும் தம் மொழிக்குத் தொண்டாற்ற ஒன்று கூடுவரேல், தமிழ் முரசு உலகெங்கும் முழங்கி நிற்கும் என்பதில் ஐயமும் உளதோ? *நன்றி: தமிழ்த் தூது.* ★